ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா ரூபா 5 தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம் மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 23—6—46 | இதழ் 9

## இனும் கொடுப்பதற்கும் பிராமணர்களின் உத்தரவு!

[கைவல்யம்]

இராமாயணத்திலுள்ள ஒரு முக்கிய பாகத்தைச் சொல்லுகிறேன். கதையோடு கதையாய் இதைத் தள்ளிவிடாதீர்கள். இதைக் கவனித்தீர்களானால் இராமாயணம் எழுதப்பட்ட காரணமும் இராமராச்சியச் சிறப்பும் தெரிந்துவிடும். இராமர் காட்டிற்குப்போவதாகச் சீதையிடம்சொன்னார். நானும் வருகிறேன் என்று சொல்லநீ வந்தால் காட்டில்பலதுன்பங்களை அனுபவிக்கநேரிடும் என்றார். ஒரு பெண்ணை வைத்துக் காப்பாற்ற முடியாதவனென்று என் தகப்பனருக்குத்தெரிந்திருந்தால் உனக்குக்கலியாணம் செய்துகொடுத்திருக்க மாட்டார் என்றாள். சீதைசொன்னபடிசாதாரணமாகச் சில பெண்கள் சொல்லுவதுண்டு. சீதை அவ்விதம்சொன்னது குற்றமே. காட்டிற்கு உன்னைக்கூட்டிக்கொண்டுபோகிறேன்; நீவருவதாயிருந்தால் நான் சொல்கிறபடியே செய்துவிட்டுவரவேண்டும். அதாவது உன் நகைகளையும் உன்னிடமுள்ள மற்றப் பொருள்களையும் பிராமணர்களுக்குக்கொடுத்துவிடவேண்டும். உன்னுடைய வேலையாட்களுக்கு நீ ஏதாவது கொடுக்கநினைத்தால் அதையும்பிராமணர்களைக் கேட்டுக் கொடுக்கவேண்டும், என்று இராமர் சொன்னார்.

இதனால் பிராமணர்களுக்கு எல்லாம் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே இராமாயணக் கதை எழுதினதென்பதுதெரியவில்லையா? ஊரிலிருந்தாலும் காட்டுக்குப் போனாலும் எல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்துவிடு என்று சொல்லவேஎல்லோருக்கும்பொதுவாயுள்ள தெய்வம் பூலோகத்தில் அவதாரம் பண்ணி சனங்களுக்கு நடந்து காட்ட, இராமராச்சியம் நடத்தி வந்தது என்று விளங்கவில்லையா? அந்தத் தெய்வம் நமது தேசத்தில்மட்டும் அவதாரம் பண்ணிப் பிராமணர்களை இரட்சித்தும் நம்மை எல்லாம் மோட்சத்திற்கு அனுப்ப ஏற்பட்ட பொறுப்பும் கருணையும் எவ்வளவு ஆச்சரியமுடையதாக இருக்கிறது! "பற்பல நாட்டிலும் பார்ப்பார் இலையால்" என்று கபிலர் சொன்னபடி எந்த நாட்டுக்கடவுளும், எந்த நாட்டிலும் பிராமணர்களைச் சிருஷ்டிக்கவில்லை. நமது கடவுள் நம்நாட்டுக்குப்பிராமணர்களைச் சிருஷ்டித்துப் பூலோகத்தில் அவர்கள் சுகமாக ஜீவிக்க உங்களிடமுள்ளதெல்லாம் அவர்களுக்குக்கொடுத்துவிடுங்கள்; அப்பொழுதுதான் உங்களுக்கும் செத்துப்போன உங்கள் முன்னோர்களுக்கும் மோட்சம்கொடுப்பேன் என்று சொல்லும் நம்கடவுளின் பெருந்தன்மைதான்என்னே! அவருடைய அன்பிற்கும் கருணைக்கும் நாம் நன்றி செலுத்தாமலிருப்பதுதான் எப்படி? உலகத்தில் பல சமயங்களிருக்கின்றன. அந்தந்தச் சமயத்தெய்வங்கள் அதனதன் லோகத்தில் இருக்கின்றன. நமது தெய்வமோ தன்லோகத்தில் செளக்கியமாகஇருக்காமல்மனைவியுடன் பூலோகத்திற்கு வந்து படாதபாடு பட்டுப் பிராமணர்களை நான் என் முகத்திலிருந்தும், உங்களைஎல்லாம் என் காலிலிருந்தும் உண்டாக்கினேன். ஆனதால் பிராமணர்களுடைய உதவியில்லாமலும் அவர்களை என்முன் நிறுத்தாமலும் பிராமணனல்லாதவன் வணங்கினால், கும்பிட்டால் அவன் தலையை வெட்டுவேன் என்று வெட்டவும் செய்தார். அந்தத் தெய்வத்தின் நீதியையும் நேர்மையையும் நீங்களே பாருங்கள்.

தெய்வம் ஒன்றே என்றும் அது எல்லோருக்கும் பொது என்றும் எல்லாச் சமயங்களும் சொல்லுகின்றன. நமது சமயமும் அப்படித்தான் சொல்லுகிறது. அப்படியிருக்க அடிக்கடி தெய்வலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வருவதும்; அவதாரம் எடுப்பதும், வழுந்தருளுவதும் என்ன? எங்கேயிருந்து இந்தத் தெய்வங்கள் வருகின்றன? அகண்டாகாரமாய் மனதிற்கு எட்டாத நிர்க்குண தெய்வத்தை எல்லோரும் வணங்கமுடியாது. ஆனதால் அந்தத் தெய்வத்தைச்சகுணமாக வைத்து வணங்கச்செய்யும் ஏற்பாடு என்றால், அதோடு, அது வந்த வேலையைப் பார்த்துவிட்டுப் போகாமல் கலியாணத்திலிருந்து கல்லெடுப்புவரை பார்ப்பானுக்குக் கொடுத்தால்தான்மோட்சமுண்டு, புண்ணியமுண்டு, நானும் அப்படியே நடத்தினேன் என்று ஏன் காட்டவேண்டும்? அவைகள் அந்தரங்க ஏமாற்றமென்று விளங்கவில்லையா? முகம்மதிய கிறிஸ்தவச்சமயங்கள் சகுண உபாசனைக்கு விக்கிரகங்களை ஏற்படுத்திக்கொள்ளாவிட்டாலும் சில குறிகளையேனும் வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது உண்மையாகவே இருக்கட்டும். அதனால் அவர்களுக்கோ மற்றவர்களுக்கோ துன்பமோ, தொந்தரவோ இல்லையே. அப்படி டல்லவே நமது சகுணமூர்த்திகள். நீ காட்டிற்கு என்கூடவருவதாயிருந்தால் உன்னுடைய பொருள்களை எல்லாம் பிராமணர்களுக்குக்கொடுத்துவிடவேண்டும். நீ உன் வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுக்கஇஷ்டப்பட்டாலும், கொடுப்பதாயிருந்தாலும் பிராமணர்களைக்கேட்டு அவர்கள் சொற்படி செய் என்றுதானே இராமர் தன் பெண்சாதியான சீதைக்குச் சொன்னார். இவ்வித உத்தரவினால் ஒரு கூட்டத்திற்கு லாபமும் ஏழைகள் வாயில் மண்ணும் லவா விழுந்துவிட்டது. இதுதான் சகுண உபாசனையா? அதை உபதேசிக்கவா அண்டபகிரண்டமெல்லாம் வியாபித்திருக்கும் தெய்வம் பூலோகத்துக்குச் சகுணமாக வந்தது? ஸ்மிருதிகளில் பார்ப்பனர்களுக்குத் தானதருமம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதுவும் உத்தமப் பிராமணர்களுக்கேகொடுக்கவேண்டு மென்றும், இல்லையேல் கொடுத்தவனுடைய உயர்வே கெட்டுவிடும் என்றும் சொல்லுகிறது. ஆனால்வேலைக்காரர்களுக்குப் பிராமணர்களைக் கேட்டு வெகுமதி கொடு என்று ஸ்மிருதியில் சொல்லவில்லை. பொருளாகக்கண்ட பொருள்களுக்கெல்லாம் முதற்பொருளாகி எங்கும் பிரகாசமாய் விளங்கும் அந்த நிர்க்குணதெய்வம் தன்னிலிருந்து இராமர் என்கிற சகுணத்தெய்வத்தைப் பூலோகத்திற்கனுப்பி ஸ்மிருதியிலுள்ள குறைபாட்டையும் நீர்த்துவைத்திருக்கிறது என்றால், எல்லாருக்கும் பொதுவில் நடனமிடும் அந்தப் பொதுத் தெய்வத்தின் கருணையும் அருளும் தனியாக நமக்கும் நம் தேசத்திலும் சென்றிருப்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

இராமாயணம் எழுதின கூட்டத்திற்கோ காரியம் கைகூடிற்று. வயிறும் நிறைந்தது. அதை நமது நாடெல்லாம் பரப்பின நமது பண்டிதர்கள் கவியின்பம் கண்டெளித்துக்கொண்டேயிருக்கிறார்கள். இராமாயணம்கேட்ட புண்ணியாத்மாக்களோ இராமர்தைகேட்டாயிவிட்டது, இனி நமக்கு ஒரு குறையுமில்லை, ஏழுகள் வயிற்றில் எப்படியும் கையைக்கொள் என்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் எப்படி

அடுத்த பக்கம் பார்க்க

### கூம்பிய மரை மலர்!

[புதுவைச் சிவம்]

★

வளநீர் மிக்க வாவியிற் றமரை
இளநகிழ் அரும்பி எழிலுடன் வளர்ந்தே,
காரிருள் நீக்குங் கதிரோன் வரவுகண்
டாரெழில் மிக்குற அலர்ந்தது மகிழ்வாய்!
மலர்ந்த அம்மலர் கண்ட மாந்தர்
நலமுற மதனெழில் நறுமணம் போற்றினர்!
இலையிதழ் கிடேன இனிதுடன் சாற்றினர்!
புலவர் போற்றிப் புகழ்மணம் பரப்பினர்!

காலை சென்றது; கடும்போ தேகிட,
மாலை வந்தது. வளமார் மலரின்
களிமுக மடங்கக் கதிரோன் மறைந்தனன்!
நலியிருட் படையும் நாற்றிசைச் சூழ்ந்தது!
பலர்புகழ் ஏற்றுப் பண்போடு விளங்கிய
மலரோ, துன்புகோள் மாந்தர் அகமுகங்
கூம்புதல் போல வாடிக் குவிந்தது!
ஆம்புகழ் யாவும் அதனுள் மறைந்தது!

தண்டமிழ் நாடேனும் வண்டார் மரைமலர்,
நுண்ணிய அறிவெனும் ஒண்கட ராலே
பெரும்புக ழென்னும் அருமணம் பரப்பி
உலகெலாம் வியக்க நிலவிய போழ்தில்,
ஆரிய மென்னும் ஆரிருள் சூழ்ந்தே
தீர்த்த ததன்புகழ் செவ்வி யாவையும்!

அந்தோ அந்தோ! அருந்தமிழ் நாடே,
எந்நாள் மீண்டும் இரவியின் ஒளியெனும்
பகுத்தறி வதனைப் பாங்குறப் பெற்று
மீதுத்திடும் இருளெனும் வெம்மதம் போக்கிப்
புகழோடு விளங்குவாய்? என்றன்
அகமலர் பொலிவுற் றலர்ந்து மகிழவே!

## இனும் கொடுப்பதற்கும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிருந்தாலும் இராமாயணம் இனும் வாங்கும் வேலைக்காரர்கள் இன்பத்தைத் துன்பமாக்கி விட்டதே. அதை விபரமாகத் தெரிவிக்கவேண்டுமானால் ஆதியிலிருந்து பலசங்கதிகள் சொல்லவேண்டும், இடமில்லை, அதில் பல, தேய்ந்து போனவை. சிலதைமட்டும் சொல்லுகிறேன். அதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். சூத்திரனுக்குத் தண்ணீர் கொடுத்தால்மற்றத்தண்ணீரும் சேஷப்பட்டுவிடும். பறையனுக்குச்சோறுபோட்டால் பாவம் என்பது எங்கேயிருந்து வந்தது! அதே இடத்திலிருந்துதான்வேலைக்காரன் இனும் உண்டாயிற்று. அரசபெண்களும், பணக்காரர் மனைவிமாரும் எதையும் பிராமணர்களைக்கேட்டுச் செய்ய வேண்டுமென்பதற்காகவே இராமர்சீதைக்குச்சொன்னர் என்று இராமாயணத்தில் எழுதினர்கள். அந்தத் தெய்வவாக்கு என்கிற எழுத்து எல்லாவற்றிலும் புகுந்துகொண்டது. பார்ப்பனர்களைக் கேட்டுச் சொல்லு என்கிற வார்த்தை சூத்தலாக அடிக்கடி நம்மவர்கள் உபயோகப்படுத்துகிருர்கள். ஏன்?எல்லாம் பார்ப்பனர்களைக்கேட்டுச் செய்துவந்த பழக்கமே.

வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டுமானல் பிராமணர்களைக் கேட்டுக் கொடுக்க வேண்டுமென்று சீதைக்குஇராமர் சொல்லியிருக்கிறர். மகாபதிவிரதையான சீதையும் அப்படியே நடந்தாள் என்பது அரசபெண்களுக்குப் பிராமணர்கள்சொல்லியுமிருப்பார்கள். எந்த இடத்திற்கும் பிராமணர்கள் போகலாம். தடுத்தால் சாபம் கொடுப்பார்கள். விஷ்ணுவும் இலட்சுமியும் படுத்திருந்த பள்ளியறைக்குப் போனதைத் தடுத்ததற்கே சாபம் கொடுத்தார்கள் என்று இராமாயணஉற்பத்திக்கதை சொல்லுகிறது. அதனல் பிறவீட்டுப் பெண்களிடம் புரோகிதர்கள் தாராளமாகப் பேசுவார்கள். ஒரு அரசபெண் பழைய சேலையொன்றைத்தன் வேலைக்காரருக்குக்கொடுப்பதானல் புரோகிதனைக் கேட்கவேண்டும் என்ற ஏற்பாடு இராமாயணத்தால் உண்டாக்கப் பட்டுவிட்டது. புரோகிதனைக்கேட்பார்கள். அரசபெண்களின்சேலைகளில் பழையதும், புதியதும், ஏக தேசம் ஒன்ருகவே இருக்கும். கொடுக்கச்சொல்லப் புரோகிதனுக்கு மனம் இல்லாவிட்டாலும் தான் வாங்கிக்கொள்வதுசரியல்ல. பழையதைப் பெறுவது தோஷம். அதிலும் அரசபெண்கட்டியதும், அவள் கட்டிக்கொள்வதையும்சுத்திகரிக்கவேண்டும். அந்தச்சுத்தி மந்திரத்தால் வரவேண்டும் என்பான். மந்திரத்தால் சுத்திபண்ணிவிடுங்கள் என்பார்கள். அதற்குவேண்டியதைச் செய்யக் காரியஸ்தனுக்கு உத்தரவு போடுவார்கள். சுத்திக்கு என்னவேண்டுமென்று காரியஸ்தன்கேட்பான். அதற்குப் பிள்ளையார்பிரதிஷ்டை வேண்டும், மந்திர தேவதையை ஆவாகனம் பண்ண வேண்டும், எதற்கும் ஆச்சாரப் பீடம்வேணுமோ இல்லையோ என்பான். இராச காரியமானதால் அஷ்டலட்சுமிகளுக்கும் அவிர்ப் பாகம் கொடுக்கவேண்டும். பிரதிஷ்டையாயிற்று. ஒவ்வொன்றிற்கும் இலையாயிற்று. தட்சணையும்வந்தது. ஆச்சாரி அம்மணமாக இருப்பார். ஒருசோமன் ஜோடி வேணடுமே, அதுவும் வந்துவிடும். இராசாக்களுக்குத் தைரியஇலட்சுமி பிரதானம். இராசாதிக்குப் பாக்கிய இலட்சுமிபிரதானம். பாக்கிய இலட்சுமிக்கு ஒரு சேலைவைக்க வேண்டுவது சாஸ்திரயுக்தம்,என்று ஒரு சுலோகமும் சொல்லுவார். இராசாத்திக்கோ காரியஸ்தர்களுக்கோ சுலோகத்தின் அர்த்தமும்புரியாது, புடவையும் வந்துவிடும். இதற்குள் சுற்றியிருக்கும் பார்ப்பனரும் வந்து சூழ்ந்துகொண்டு புரோகிதனைப் புகழ்வார்கள். கிரிகைகளை அலங்கரிப்பார்கள். பக்தியைக்காட்டிப் பதுங்குவார்கள், ஒதுங்குவார்கள். அங்கிருப்பவர்களிடமெல்லாம் அவரவர்களுக்குத்தக்கபடி பேசுவார்கள். சமயசந்தர்ப்பம் ஏற்பட்டால்இராசாவைக்கூட வரும்படியாகச் செய்துவிடுவார்கள். பின்சாப்பாட்டுக்கும் தட்சணைக்கும் குறைவென்ன? இதை இராசாவின் இன்னொரு பெண்சாதி பார்த்தால் இதைவிடப் பெரிதாகச் செய்யச் சொல்லுவாள். இதில் அவர்களுக்கென்ன கஷ்டம்? இராசாத்திக்கு ஒரு வார்த்தை, புரோகிதனுக்கு மந்திரம் என்கிற மொணமொணப்பு. இதற்காகத்தான் இராமாயணத்தில் சீதைக்கு இராமர் சொன்னது. இதை எல்லாம பார்த்த ஒரு பண்டிதன் விஜயநகரத்தைப்பார்த்துப்பார்ப்பான் பெருத்து வடுகன் துரைத்தனம் பாழ்த்ததுவேஎன்று சொன்னன்.

ஒரு வேலைக்காரிக்குப் பழைய சேலையைக்கொடுக்க இத்தனை ஆடம்பரமா? அரண்மனைச்குப்புக்தியேஇல்லையா? என்று நினைப்பீர்கள். இப்பொழுது மாத்திரம் எத்தனைபுத்திசாலிகள் இருக்கிருர்கள்.

●

## காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு

O. S. 131/34. E. P. 570/45.

Bet R.வெங்கடவரததாத்தாச்சாரியார் வாதிமனுதார்.

And ஸ்ரீனிவாஸ அய்யங்கார் 2. செல்லம்மாள் 3. பிரதிவாதிகள்.

மேற்படி நெம்பரில், தாவா அடமான சொத்துக்களை ஏலத்துக்குக்கொண்டுவரவும், டிக்ரியை நிறைவேற்றவும் வாதி மனுக்கொடுத்திருக்கிறபடியால், ஏலஇஸ்தியார் ஷரத்துக்களை நிர்ணயிக்கவும், ஆக்ஷேபணைக்கும் 1946 ஜூலை 6-தேதி வாய்தா போடப்பட்டிருக்கிற தென்பதை இதனல் அறியவும்.

M. V. ரங்காச்சாரியார்,
வாதி வக்கீல்,

17—6—46. காஞ்சிபுரம்.

## மூல வியாதிகளுக்கு யௌவன பிராஷ்

### கருணைக்கிழங்கு லேகியம்! ஆப்ரேஷன் பயன்தராது

மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல்,குத்து,வலி, மலபந்தம்,வாய்வு பவுத்திரக் கட்டிகள், 3-வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து சுகம் காணலாம். இதுபோல்எந்த மருந்திலும் சுகம் காணமுடியாது.

**12 நாள்யௌவன பிராஷ் ரூ. 3 சரஸ்வதிவைத்தியசாலை பழனி, S. I.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—
T. N. சொக்கலிங்கம்பிள்ளை மருந்து ஷாப் மதுரை.
தி. மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்ஏஜன்ஸி பொள்ளாச்சி.
Banjo Pharmacy, மருந்துஷாப் உடுமலைப்பேட்டை.
சரஸ்வதி மெடிக்கல் ஸ்டோர், நாமக்கல்.

# சட்ட மறுப்பும் - சாஸ்திர மறுப்பும்.

சமஉரிமை கோரி, தென் ஆப்பிரிக்காவிலே இந்தியர்கள் சட்ட மறுப்புச்செய்கின்றனர். இலங்கையிலே, சமஉரிமை சமசந்தர்ப்பம் கோரி, தமிழர்கள், சிங்களவர்களின் ஆட்சி ஆதிக்கத்தை எதிர்த்து வேலை நிறுத்தக் கிளர்ச்சி செய்கின்றனர்.

இங்கே, உள் நாட்டிலேயே ஆதித்திராவிடர்கள்

**சேரிகளில் வாழ்கிருர்கள்,**
**தீண்டாதாராக இருக்கிருர்கள்,**
**பொதுஉரிமைகள்கூட இல்லை,**

ஆனல் சமஉரிமைக் கிளர்ச்சிக்கு வசதி இல்லை!

### ஏன்?

இங்கே, பார்ப்பனர் தவிர மற்றவர்கள் கோவிலிலே மூலக்கிரஹம் சென்று சாமியைத் தொட்டுக் கும்பிட முடியாது, பார்ப்பனரே, பூஜை செய்யும் உரிமை பெற்றுள்ளனர்.

ஆலயத்திலே சமஉரிமை கேட்கும்தைரியமும், கிளர்ச்சிசெய்ய வசதியும், பார்ப்பனரல்லாதாருக்கு இல்லை.

### ஏன்?

சாப்பாட்டுக் கடைகளிலேகூடப்பார்ப்பனருக்கு ஒரு இடம் பார்ப்பனரல்லாதாருக்கு வேறு இடம் என்ற பேதம் காட்டப்படுகிறது. இங்கேயும் சம உரிமை கேட்க, பார்ப்பனரல்லாதாருக்குத் தைரியம் இல்லை; கிளர்ச்சி செய்ய வசதி இல்லை.

### ஏன்?

இப்போதும், வைதிகப் பார்ப்பனர், நாம் தொட்டுவிட்டால் தீட்டாகிவிட்டதாகத்தான் கருதுகிருர்கள், பார்ப்பனர் தவிர மற்றவர்கள் மட்ட ஜாதி என்ற திட்டம், சாஸ்திரப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனை எதிர்த்துச் சம உரிமை கேட்கவோ, கிளர்ச்சி செய்யவோ, துணிவும் வசதியும் இல்லை.

### ஏன்?

ஸ்மட்ஸ் துரையின் சட்டத்தை மீறுவது சுலபம்;சனதனிகளின் சாஸ்திரத்தை மீறுவது கஷ்டம்

### ஏன்?

ஸ்மட்ஸ், அரசியல் தலைவர்;
சனதனி, பூதேவர்.

இந்தச் சூட்சமத்தை உணராமல் இன்னும் எவ்வளவுகாலம், காங்கிரஸ் திராவிடர்கள் இருக்கப் போகிருர்கள்?

சட்ட மறுப்புக்கு, அரசியலாரின் தண்டனை மட்டுமே உண்டு.

சாஸ்திர மறுப்புக்கு, ஆண்டவனின் தண்டனை உண்டு என்று மிரட்டுவார்கள்.

சட்ட மறுப்புச் செய்பவன், வீரன் என்றுபோற்றப்படுவான்; சாஸ்திர மறுப்புக்காரனைப் பாபி என்று தூற்றுவர்.

### ஏன்?

சட்டங்கள் மறுக்கப்பட்டு, நிலைமை சரியானல்சனதனிகளுக்கு அவர்களின் சுகவாழ்வுக்குக் கேடு இல்லை.

சாஸ்திரங்கள் மறுக்கப்பட்டு, நிலைமைமாறினல் சனதனிகளின் சுகவாழ்வு கெட்டுவிடும். ஆகவே தான், சட்ட மறுப்புக்கு இசையும் பார்ப்பன சமூகம், சாஸ்திர மறுப்புக்கு இசைவதில்லை. தென் ஆப்பிரிக்க சர்க்கார், இந்தியரைக் கேவலப்படுத்தும்போக்கு, கண்டிக்கப்படுகிறது, சர்க்காராலும் சகல அரசியல் கட்சிகளாலும்; அந்தச் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தப்படுகிறது; அந்தக் கிளர்ச்சி பாராட்டப்படுகிறது நியாயம்—அவசியம்—முக்கியமானதுங்கூட.

ஆனல் அதேபோல, இங்கே, சேரிகளில் வாழும் பழங்குடி மக்கள், சமஉரிமை கோரி, மற்ற உயர்ஜாதிக்காரர் வசிக்கும் பகுதியிலே "இடம் தேடும்" கிளர்ச்சி செய்தால், என்ன நடக்கும்? சட்டம்சீறும்—சாஸ்திரம் சபிக்கும்—நாட்டிலே இரத்தக்களரி ஏற்படும்.

பிணத்தை, ஜாதி இந்துவுக்கென்றுள்ள இடத்தில் கொளுத்தினதற்கே, இதே திங்களில், ஒரு ஆதித்திராவிடருக்கு 4-மாதக்கடுங்காவல் தண்டனை தந்தது, நம் நாட்டுச் சட்ட மன்றம்.

பார்ப்பனர் அர்த்த மண்டபத்திலே நின்று தரிசிக்கலாம், மற்றவர்கள், வெளியேதான் நின்றுதொழவேண்டும், என்று திருவண்ணாமலை கோயில்வழக்கிலே 'தீர்ப்பாகி' இருக்கிறது. திருவையாறு சமஸ்கிருதப் பள்ளிக்கூடத்திலே, பார்ப்பனரல்லாத மாணவர்களுடன் ஒன்ருக உட்கார்ந்து சாப்பிடுவது, தங்கள் ஜாதிக் கௌரவத்துக்குக் குறைவு, என்று பார்ப்பன மாணவர்கள் கூறினர், பார்ப்பனத் தலைவர்கள் ஆதரித்தனர்.

இன்றும், பார்ப்பனர் குளிக்கும்குளம், மற்றவர்களுக்குஇடம் தராத நிலை, சில இடங்களிலே உண்டு.

இன்றும், பார்ப்பனர்கள் வசிக்கும் அக்ரகாரத்திலே; மற்ற வகுப்பாருக்கு இடம் தரமாட்டார்கள்.

இவைகளை எல்லாம், மத ஆச்சாரத்தின் பேரால் நடத்துகிருர்கள்; சாஸ்திர ஆதாரம் கூறுகிருர்கள்.

சம உரிமைக்காகத் தென் ஆப்பிரிக்காவிலே சட்ட மறுப்பு துவக்கும் தைரியம் பிறந்தது போல, இங்கு, சம உரிமைக்காக, சாஸ்திர சம்பிரதாயங்களை மறுக்க யாராவது முன்வந்தால் அவன்,

**நீசன், பாபி, நாஸ்திகன்**

என்று, மக்களாலேயே, எந்தமக்களின் சமஉரிமைக்காகப்பாடுபடக் கிளர்ச்சி செய்கிருேமோ, அதே மக்களாலேயே,தூற்றப்படுவர், கண்டிக்கப்படுவர், கல்லால் அடிக்கப்படுவர்.

| | |
|---|---|
| **சட்ட மறுப்பு சுலபம்.** | **சாஸ்திர மறுப்பு கஷ்டம்.** |
| **சட்டம் பொது** | **சாஸ்திரம் பார்ப்பனரின் தனி உரிமை** |

8-ம் பக்கம் பார்க்க

சென்ற வாரத் தொடர்ச்சி:

# ★ ரங்கோன் ராதா! ★

சௌமியன்.

என்னை உள்ளே தள்ளிப் பூட்டிவிட்டார் உன் தந்தை! சொந்தவீட்டிலேயே கைது செய்யப்பட்டேன்—ஒரு குற்றமும் செய்யாத நான். வெறும் பூஜாரி, குடிவெறியில் எதையோ உளறினால், அதற்காக என்னை இப்படிக்கொடுமை செய்வதா? பெண் இனத்தின் தலைமீது இருக்கும் இந்தப்பெரிய ஆபத்தைப்பற்றியார் கவலை எடுத்துக்கொள்கிறார்கள்? உலகிலே, எதை எதையோ சீர்திருத்தம் செய்வதாகப், பேசிக்கொள்கிறார்கள். என்னென்னமோ கொடுமைகளை நீக்க வேலை செய்கிறார்கள். இந்தக்கொடுமை இருக்கிறதே ஆண் பெண்ணைப்படுத்தும்பாடு, இதனை நீக்குவதற்கு யார் வேலை செய்கிறார்கள். பரமசாது தர்மவான் ஊர்சொத்துக்குஆசைப்படாதவர் கௌரவமான குடும்பத்தவர் என்றெல்லாம் புகழப்பட்ட உன்தகப்பனாரிடம், நான் இந்தக்கொடுமைப்பட நேர்ந்தது என்றால், குடியனிடம், குணங்கெட்டவனிடம், சிக்கியபெண்கள், எவ்வளவுபாடு படுவார்கள்! நமது ஊர்களிலே பார்க்கிறோமே இந்தக்கோரத்தை. குடித்துவிட்டுக்கூத்தாடும் புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டபெண்கள், வடிக்கும் கண்ணீரை யார் கவனிக்கிறார்கள். அவள் வாயாடி, புருஷனுக்கு அடங்குவதில்லை, அவன் தான் குடிகாரன் என்று தெரியுமே அதற்கேற்றபடிதானே இவள் நடந்துகொள்ள வேண்டும் என்று, பெண்ணுக்குப்புத்தி கூறவருவார்களே தவிர, புருஷனைக்கண்டிக்கத்துணியமாட்டார்கள். அதிலும் உன் அப்பா, ஊருக்குப் பெரியவர்; ஊர்ப்பஞ்சாயத்து அவரிடம் வரும் அப்படிப்பட்டவரை, யார் கண்டிப்பார்கள்! மேலும், எனக்குப்பேய்பிடித்து ஆட்டுகிறது என்ற வதந்திவேறு, ஊரெங்கும் பரவிவிட்டது. ஆகவே, என்னை அவர் என்னகொடுமை செய்தாலும் கேட்பார் கிடையாது.

என்னை அறையிலே தள்ளிப்பூட்டிவிட்டார்: நான் திகைத்துப்போனேன். கதவைத் தடதடவென்று தட்டினேன்; கோவெனக்கதறினேன்; இப்படி அவதிப்படுவதைவிட, உயிரைப்போக்கிக்கொள்கிறேன் என்று கூவினேன்; அவர் இருந்தால்தானே, பதில்பேச. என்னைப்பூட்டிவிட்டு, நேரே, என் அப்பாவிடம் ஓடி இருக்கிறார். அங்குபோய் என்ன சொன்னாரோ தெரியாது, கொஞ்சநேரத்துக்கெல்லாம், என் அப்பா வந்தார். கதவு பூட்டினது பூட்டியபடி இருந்தது; உள்ளே நான், கொஞ்சம்மயக்கத்தோடு, தரையில் படுத்துக்கிடந்தேன். வெளியே பேசும்குரல் கேட்டு, எழுந்து நின்றுகொண்டு, கதவைத்தட்டினேன். என் அப்பாபேசினார், கதவைத்திறக்காமலே.

"ரங்கம்! ஏனம்மா இப்படிச்செய்கிறாயே!" என்றார். மகனே!உன் தாத்தா, என் அப்பா, என்னைக்கேட்டார், ஏனம்மா இப்படிச்செய்கிறாய் என்று. நான் செய்தது என்ன? புருஷனின் கொடுமைக்கு ஆளாகிப்புலம்பிக்கொண்டிருந்தேன். என்னை இம்சித்தவரைக், கேள்வி கேட்டுக்கண்டிக்கவேண்டிய என் தகப்பனார், என்னைக்கண்டிக்கலானார்.

"அப்பா! கதவைத்திற" என்று நான் கூறினேன்.

"திறக்கிறேன்; ஆனால்ஒன்றும் நீஅமக்களம் ஆர்ப்பாட்டம் செய்யக்கூடாது. என்மீது ஆணையிட்டுச் சொல், திறக்கிறேன்" என்றார்.

"என்னப்பா இது, நீங்களும் அந்தப் பாவிபோலவே நடந்துகொள்கிறீர்கள்." என்று கேட்டேன். என்புருஷர் பேசலானார்,

'கேட்டீர்களா, நான்பாவி! உங்களுக்குத்தெரியாது மாமா, ரங்கம் பேசின பேச்செல்லாம். இதுவரை, நான் இப்படி ஒரு பெண்பேசிக்கேட்டதுஇல்லை" என்றார். என் அப்பாவோ, சற்றுச் சோகமாக,

'என்னப்பா செய்யலாம்! அவளா பேசுகிறாள். ரங்கம், பரமசாதுவல்லவா, உனக்கே தெரியுமே, இவ்வளவுகாலமாக அவனோடு நீ குடித்தனம் செய்யவில்லையா, நீங்கள் இருவரும்சந்தோஷமாகக் குடும்பம் நடத்துவதைக்கண்டு நானெவ்வளவோ ஆனந்தப்பட்டேன். என்ன செய்யலாம்! ரங்கம், தன்பழைய நிலைமையில் இருந்தால், இப்படி ஏன் நடக்கப்போகிறது. எல்லாம் அதன் சேஷ்டை, அவள் என்ன செய்வாள்'' என்றார். அதாவது, என்னைப்பிடித்துக்கொண்டிருக்கும் பேயின் போக்குக்கு நான் பொறுப்பு அல்ல, என்று என்கணவரிடம் வாதாடினார். உன் அப்பா அதற்கு, "மாமா! இதற்கு என்னதான் வழி?" என்று கேட்டார். "நான் விசாரித்து வைத்திருக்கிறேன். இந்த ஊர் மந்திரக்காரர்கள் பிரயோஜனமில்லை; சாந்தாவது கல்லிலே பனையவரம் என்றோர் கிராமம் இருக்கிறதாம் அங்கே ஒருபக்கிரி இருக்கிறானாம், அவன் சர்ப்பதுகான் பூஜை நடத்தி, ரட்சை கட்டுகிறானாம், எப்படிப்பட்ட பிரம்மராட்சசாக இருந்தாலும், ஓடியிலே போய்விடுமாம்'' என்றார். எனக்குச் சிரிப்புத்தான் பொங்கிற்று, உரக்கச்சிரித்தேன். சிரித்துக்கொண்டே இருந்த நான் ஐயோ! ஐய்யயோ'' என்று அலறினேன்.

என்கணவனும் அப்பாவும் எனக்குப் பேய்பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது, அதன் சேஷ்டையாலேயே நான், உளறுகிறேன் என்று பேசுகிறார்கள். அதே குற்றம் சாட்டியே என்னைக்கொடுமைப் படுத்தினார் உன் அப்பா. நான் என்ன செய்தேன்? அவர்கள் கூறுவது முற்றிலும் சரி என்பதுபோல நடந்துகொண்டேன்! ஒருவள் சிரித்துக்கொண்டே இருந்துவிட்டு திடீரென்று ஐய்யயோ என்று அலறினால் என்ன எண்ணுவார்கள். உண்மையிலேயே பேயாட்டம் என்றுதானே நினைப்பார்கள் ஆனால் நான் அவ்விதம் செய்தேன் கணவனின் பேராசைக்குக் குறுக்கே நிற்கும் என்னை அவர் கொடுமைப்படுத்துகிறார்; அதற்கு ஏதாவது சாக்குக்கிடைக்க வேண்டுமே என்பதற்காக, எனக்கு பேய் பிடித்துக்கொண்டதாக வம்புளி செய்து வந்தார். அந்தப்புரளியை ஆதரிப்பது போல, சிரித்துக்கொண்டே இருந்த நான் திடீரென்று அலறினேன். எனக்கென்ன கொழுப்பா! நான் சுவற்றின் ஓரமாகநின்றுகொண்டிருந்தேன் அங்கே ஒரு பாழாய்ப்போன தேள் இருந்து என்னைக்கொட்டிவிட்டது. அதனால் நான் அலறினேன்.

சிரித்துக்கொண்டே இருந்தநான் ஐய்யயோ என்று அலறியதும் என் அப்பா, "என்னம்மாரங்கம்!" என்று பதைபதைத்துக்கேட்டார், நான் அலறியபடி, "ஐய்யய்யோ! அப்பா! தேள்கொட்டிவிட்டது!" என்று கூறினேன். "அப்பா! கதவைத்திற. தேள் கொட்டிவிட்டதாமே, அலறுதுபார்'' என்று என் அப்பா சொன்னார், உன் அப்பாவோ, சிரித்துக்கொண்டே, "நீங்கள் ஒருபைத்யம் மாமா! தேளும்இல்லை, பாம்பும் இல்லை, அவள்சிரித்ததும் பேயின் சேஷ்டை, அதுபோலவே அழுததும் பேயின்சேஷ்டைதான். இப்படித்தான் சிரிப்பு அழுகை, தூற்றுவது கொஞ்சுவது, மிரட்டுவது பயந்து பேசுவது என்று பலரகம் நடந்தபடி இருக்கும்'' என்றார். உள்ளே நான் துடியாய்த்துடித்தேன், வலிதாங்காது கூவினேன். கொட்டியது காலிலே, ஆனால் வலியோ உடலெங்கும்; வியர்த்து விட்டது; மார் அடைப்பது போலாகிவிட்டது. "ஐயோ! அப்பா! சத்தியமாகத் தேள் கொட்டிவிட்டதப்பா! மார் அடைக்கிறது! பிராணன் போகிறது. உங்களைக்கும்பிடுறேன், கொஞ்சம் கதவைத் திறவுங்கள்; கொலைபாதகம் செய்யாதீர்கள்'' என்று நான் கதறினேன் "ஒருவேளைதேள்தான் கொட்டிவிட்டிருக்குமப்பா! அலறுவது தெரியவில்லையா? கதவைத்திற'' என்றார் என்தகப்பனார். பிடிவாதமாக உன்அப்பா "உங்களுக்கு ஒன்றும் தெரியாது மாமா! இதெல்லாம் பேயின் பாசாங்கு, நான் சதா அனுபவிக்கிறேன், எனக்கல்லவா தெரியும் அந்தச்சேஷ்டைகள். கொஞ்சநேரம் அழுதானபிறகு தானாக அடங்கிவிடும்''என்று கூறினார். எப்படியடாமகனே அடங்கும்! தேள்கொட்டினதால் விஷம் ஏறத் தொடங்கிற்று. கொட்டினஇடம்நெருப்புப்பட்டதுபோல எரியலாயிற்று. கால் முழுதும் குடைச்சல்; மார்வலி; மயக்கம் வரலாயிற்று; அலறினேன், துடித்தேன்; ஓவென அழுதேன்; வெளியே இருந்துகொண்டே என் அப்பா அழுதார், "என்ன கண்றாவியம்மா இது! உன்னை எவ்வளவு அருமையாக வளர்த்தேன்: இது என்ன கோரம்?'' என்றுகதறினார். "அப்பா! அப்பா!'' என்று கூவினேன்; "அடேயப்பா! தேளாகவேனும் இருக்கட்டும்,இல்லை பேய்ன்சேஷ்டையாகவே இருக்கட்டும் எதுவாகஇருந்தாலும்சரி, என்னால் ரங்கம் துடித்து அழுவதைக் கேட்டுச் சகிக்க முடியவில்லை: தயவு செய்து கதவைத்திற; நான் என் குழந்தையைப்பார்த்தாக வேணடும்; என்னால் இனி ஒரு நிமிஷமும் பொறுக்கமுடியாது'' என்று கூறிக்கொண்டே என் அப்பா சிறு குழந்தைபோல் அழுதார். அவ்வளவு வேதனையிலும் எனக்கு அவருடைய அன்பின்போக்கு ஆனந்த மூட்டிற்று. எது எப்படி இருப்பினும், அவருக்கு என்னிடம் அன்பு இருக்கிறதல்லவா என்று எண்ணிச் சந்தோஷப்பட்டேன் உன் அப்பாவுக்குப்பயம்,என்னை உண்மையாகவே தேள்கொட்டிவிட்டது என்று தெரியாது நான் அறையை விட்டு வெளியே வருவதற்காகத் தந்திரம் செய்கிறேன் என்றே அவர் எண்ணிக்கொண்டார். ஆகவே அவருக்குக் கதவைத் திறக்கத் துளியும் சம்மதமில்லை என் அப்பாவின் வேண்டுகோளை மறுக்கவும் முடியவில்லை. "ஏ! ரங்கம்! சும்மா இருக்கமாட்டாயா?'' என்றுமிரட்டினார். 'ஐயோ! என்னைவெளியேவிட்டு வெட்டிபோட்டுவிடுங்கள்; உள்ளே இருந்து உயிர் துடிக்க என்னால் முடியாது. குலதெய்வத்தின் மீது ஆணையிட்டுக்கூறுகிறேன் தேள்தான் கொட்டிவிட்டது. வாயிலே நுரை தள்ளுகிறது; இன்னம் கொஞ்ச நேரம் உள்ளேயே இருந்தால், உயிர் போகும்; ஐய்யோ! தண்ணீர்! ஒருமுழுங்கு தண்ணீர்! மார் அடைக்கிறது'' என்று நான் தடி துடித்துக்கேட்டேன். என் அப்பாவால் என்கதறலைக் கேட்டுத் தாங்கமுடியவில்லை; ஒரே ஆத்திரம் பிறந்துவிட்டது'' யாரடா அவன் மடையன்! உள்ளே உயிர் வேதனைபோடுஒருபெண் கதறிக்கொண்டிருக்க, செக்கு உலக்கை போல நின்றுகொண்டிருக்கிறாயே! உன் மனம் கல்லா! மனைவி உள்ளே துடிதுடிக்க வெளியே நின்றுகொண்டுவீண்பேச்சு பேசுகிறாய். கதவைத்திறக்கிறாயா உடைக்கட்டுமா இந்தக்கதவை. பேயாக இருக்கட்டும் பிரம்மராட்சசாக இருக்கட்டும், பிரளயமே வருவதாக இருந்தாலும் சரி என் மகளை நான் இந்த க்ஷணம் பார்த்தாகவேண்டும். திற கதவை'' என்று கர்ஜனை செய்தார் ஒரு தேளா' ஓராயிரம்தேள் கொட்டி வலி இருந்தாலும் என்ன! அந்தக் கிழவரின் வீராவேசமும் அன்பும், என்னை ஆனந்த சாகரத்திலாழ்த்திற்று. கொடுமைகள் மலைமலையாகக் குவிந்தாலும், அன்புள்ள என் அப்பா இருக்குமட்டும் எனக்குக் கவலையில்லை, என்று நான் எண்ணிப் பூரித்தேன்—என் தகப்பனாரின் கோபாவேசத்தைக்கண்ட, உன் தகப்பனார் கொஞ்சம் பயந்து போனார் என்பது அவர் பதிலிலே நன்றாகத்தெரிந்தது. "மாமா!என் மனம் கல்லுமல்ல இரும்புமல்ல! ரங்கம் கதறுவதுகேட்டு, எனக்குந்தான் மனம் பதறுகிறது. என்மேல் நிஷ்டூரம்வேண்டாம். பேயின் சேஷ்டைதான் இது. இந்தச்சமயத்திலே கதவைத் திறந்தால், உண்மையாகவே ஆபத்துநேரிடும்'' என்றார், கொஞ்சம் பணிவாகவே. என் அப்பாவின் குரலிலே துக்கம் தோய்ந்திருந்தது "அப்பா! உன் மனைவியைக் காப்பாற்றவேண்டுமென்ற அக்கரை உனக்கு இல்லாவிட்டாலும், என்மகளைக் காப்பாற்றவேண்டும் என்ற அக்கரைஎனக்கு எப்படி இல்லாமற்போகும். என்ன ஆபத்துவந்தாலும் சரி, கதவைத் திறக்கத்தான் வேண்டும். உனக்குத் திகிலாக இருந்தால், சாவியைக்கொடுஎன்னிடம், நான் கதவைத் திறக்கிறேன்; நீ வெளியே போய் இரு'' என்றார். 'மாமா! இப்படிப்பேசாதீர். உமக்குமட்டும் ஆபத்து வரலாம், எனக்கு வரக்கூடாதென்பதா என்எண்ணம்'' என்றுகூறினார். இரண்டோர் நிமிஷங்களிலே பூட்டு திறக்கும் சத்தம் கேட்டது தைரியமாகப் பேசினாரே தவிர, என் அப்பாவுக்கும் கொஞ்சம் அச்சம் இருந்துகொண்டிருந்தது. கதவைத் திறப்பதற்குமுன்பு அவர், "அம்மா! ரங்கம்! ரங்கம்!'' என்று வாஞ்சையுடன் கூப்பிட்டார்; அதாவது சாந்தப்படுத்தினார்.கதவு திறக்கப்பட்டது; வெளிச்சம் உள்ளே விழுந்தது, அதுவரை என்னை ஏய்த்துக்கொண்டிருந்த தேள், கதவு இடுக்கைவிட்டு, சரசரவென்று சுவற்றில் ஏறக்கண்ட நான், தாவி வெளியே வந்து, என் தகப்பனாரின் கைத்தடியை எடுத்தேன், தேளை அடிக்க, நான் தடி எடுத்ததுதான் தாமதம், இருவரும் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு, கூடத்தைவிட்டு வேகமாக வெளியேஓடிவிட்டார்கள்.

(தொடரும்)

---

## செய்திப் பொறிகள்

★

பக்கிம்ஹாம் கர்னாடிக்மில் தொழிலாளர்கள், வடநாட்டுக்காரர்களை ஆலையில் காவலாளிகளாக வைக்கப் பட்டிருப்பதை எதிர்த்து, வேலைநிறுத்தம் செய்வதென்று தீர்மானித்துவிட்டனர்.

●

இலங்கை சர்க்காரின் போக்கைக் கண்டித்து, அங்குள்ள தமிழர்கள்,வேலைநிறுத்தம் செய்கின்றனர். சிங்களமந்திரி சேனாநாயகா சீறுகிறார். தமிழர் பணிய மறுக்கின்றனர்.

●

அமைதியான முறையிலே, சட்ட மறுப்பு செய்யும் தென் ஆப்பிரிக்கா வாழும்இந்தியர்களை (இவர்களில்பெரும்பாலோர் தமிழர்கள்) வெள்ளைநிறத் திமிர்கொண்ட குறும்பர்கள், தாக்கினர்.—பெண்களை அவமதித்தனர்—கூடாரங்களைக் கொளுத்தினர்.

●

காஷ்மீருக்குள், தடை உத்திரவை மீறிச் சென்ற பண்டிதஜவஹரைப் போலீசார் தடுத்தனர்—துப்பாக்கிமுனையால் அவருக்குக் கன்னத்தில் காயம் ஏற்பட்டதாம். பண்டிதஜவஹர் கைதுசெய்யப்பட்டார்.

●

வைசிராய் வெளியிட்ட இடைக்கால சர்க்கார் அமைப்புத்திட்டம். அதிருப்தி தான். என்றாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியது தான் என்று காங்கிரஸ்தீர்மானித் திருக்கிறது

●

ரயில்வே போர்டார், தொழிலாளரின் கோரிக்கைகளைக் கவனிக்க, சமரச போர்டு நியமிக்க இசைந்ததால், 27-ந் தேதி நடைபெற ஏற்பாடாகி இருந்த ரயில்வே வேலைநிறுத்தம், ரத்து செய்யப்பட்டு விட்டது.

★

## வரவேற்கிறோம்.

### கல்கத்தாவில் சமுகசீர்திருத்த இயக்கம்

தீண்டாமை, மதுபானம், முதலியவற்றை ஒழிக்கவும், எதிர் ஜாமீன் முறையை ஒழித்து விதவா விவாகத்தை ஆதரிக்கவும் கூட்டுறவு முறைகள், கூட்டு விவசாயம், கூட்டுக் குடிசைத் தொழில் முதலியவற்றை வளர்க்கவும் சுயதேவை பூர்த்தி முறையை அமல்நடத்தவும் டாக்டர் பி. ஸி. ராய் தலைமையில் கல்கத்தாவில் சமூக வகுப்புச்சீர்திருத்த இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

வங்கத்தில் 'பிரம்ம சமாஜம்' தோன்றிய காலிலிருந்து சீர்திருத்த ஆர்வம் இருந்தே வந்தது. நாட்டு விடுதலைப் போராட்டம் காரணமாக, இந்தச் சீர்திருத்த இயக்க வேகம் குறைந்து போயிற்று. சமுகப் பிரச்னைகள் கவனிக்கப்படாதுபோய்விடவே, வைதிகர் தாண்டவமாடவும் உலுத்தரின் கோட்பாடுகள் தலைதூக்கவுமாயின. இந்தக் குறைபாட்டை உணர்ந்து, சமுக சீர்திருத்தத்தைக் கவனிக்க ஒரு இயக்கம் தோன்றியிருப்பது, மகிழ்ச்சிக்குரிய செய்தி.இதனை நாம்வரவேற்பதுடன்,கடந்த 25 ஆண்டுகளாக, சமுகசீர்திருத்தத் துறையிலே அஞ்சாதுபணிபுரிந்துவரும், சுயமரியாதை இயக்கத்துக்கும், வங்க சமுகசீர்திருத்த இயக்கத்துக்கும் தொடர்பு ஏற்படும் என்றும் நம்புகிறோம்.

# திராவிட நாடு

காஞ்சி] 23—6—46 [ஞாயிறு

## சுதேசி சுரண்டல் யந்திரம்

★

"பணக்காரன் கொழுத்தபணக்காரனுகிறன். ஏழை, பரம ஏழையாகிறன். பஞ்சமும் பசியும் நோயும் தாண்டவமாடுகிறது."

என்று சென்றகிழமை காந்தியார் தமது பிரார்த்தனைக்கூட்டத்திலே கூறினர். உண்மையான நிலைமை. இந்தநிலை, "சாத்தானின் சேட்டை" என்ருர்; நமக்குச்சாத்தான் தெரியாது, ஆனல், இந்தநிலை சேட்டை, ஆபத்தான சேட்டை என்பதை உணர்கிறோம். இது போக, இந்நிலை, மாறஎன்னவழி கூறினர் காந்தியார்? இதற்குமுன், "மகரிஷிகளும் மகாத்மாக்களும், ஆழ்வாராதிகளும்நாயன்மார்களும் சித்தர்களும் ஜீவன்முக்தர்களும்" சொன்ன அதேவழியைத்தான் அவரும் சொன்னர், அதாவது' "ராமநாமத்தை ஜெபியுங்கள்' என்ருர்! ராமநாமத்தின் மகிமையினலேயே பணக்காரன் ஏழைஎன்ற வித்யாசம் நீங்கும், பஞ்சமும் பிணியும் போகும் என்று கூறுகிருர். ராமராஜ்யத்திலேயே, ஓடம் ஓட்டி ஜீவித்த "குகன்" ஒருபுறத்திலும், ஜாதகம் கணித்துக்கொடுத்து அரண்மனையில் வசித்துவந்த வசிஷ்டர், மற்றோர் புறத்திலும் வாழ்ந்தனர், என்பதையும், உல்லாச புருஷர்கள் ஒருபுறமும் உழவர்கூட்டம் மற்றோர் புறமும் வாழ்ந்திருந்தது என்பதும், வால்மீகி, கம்பர், இருவர்தீட்டிய இராமாயணத்திலிருந்தும், தெரிந்துகொள்ளலாம். அவ்விதமிருக்க, "ராமநாமம்" பணக்காரர்—ஏழை என்னும் சமூகப் பேதத்தையும், அதனல் விளையக்கூடிய வேதனைகளையும் நீக்கும் என்று, காந்தியார் கூறுகிருர். எப்படி அது சாத்தியமாகும்? கேட்கப்படாது! மகாத்மாக்களின்வாசகத்தைச் சந்தேகிப்பதே மகாபாபமேன்றே!!

ஏழை, பணக்காரன் என்ற பேதம் இருப்பதும், மறைவதும், மாற்றப்படுவதும் ஒருபுறம் இருக்கட்டும், பணக்காரர்களாகச் சிலரே, இருப்பது, தேசத்தை மட்டுமல்ல, தேசீய இயக்கத்தையே கெடுத்துவிடும் என்றகருத்தைக் கவனிப்போம். கவனிக்கும்படி, நண்பர் காமராஜர்ன் பேச்சு, தூண்டுகிறது.

ஜூன் முதல்தேதி அம்பாசமுத்திரத்தில் கூடிய அரசியல் மாநாட்டிலே பேசும்போது, நண்பர் காமராஜர், 'காங்கிரஸ் ஏழைமக்களின் ஸ்தாபனம். அவர்களின் நன்மைக்காகப்பாடுபடுவதே அதன் இலட்சியமாகும். காங்கிரஸ் இலட்சியத்தில் அனுதாபம் காட்டி ஸ்தாபனத்தில் சேர்ந்துகொள்ளும் மனப்பான்மைசமீபகாலத்தில் பணக்காரர்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. காங்கிரசில் செல்வாக்கான பதவிகளைக் கைப்பற்றிக்கொள்ளத்திட்டம் போட்டு அவர்கள் வேலைசெய்கிறர்கள். கடந்த 25-வருஷங்களாகக் காங்கிரஸ் ஊழியர்கள் தியாகம் செய்தது காரணமாகக்கிடைக்கப்போகும் பலனைத் தாங்கள் அனுபவிக்கவேண்டும் என்ற ஆசையேஇந்த முயற்சியின் அடிப்படையான காரணமாகும். பணக்காரர்களின் இந்த எண்ணம் நிறைவேறதபடி பார்த்துக் கொள்ளவேண்டியது காங்கிரஸ்காரர்கள் கடமை.' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

எந்த நாட்டிலும், ஏற்படும் இந்த ஆபத்தை நண்பர் காமராஜர் உணரத்தொடங்கியது கண்டுமகிழ்கிறோம். பெரியாரின் இயக்கத்தினை நாட்டு விடுதலைக்கே கேடானது என்ற கண்ணோடுநோக்காது இருந்திருந்தால் காமராஜருக்கு இந்தக் கருத்து, அதாவது பணஆதிக்கக்காரர்கள், காங்கிரசில் புகுந்து கொண்டு அதன்மூலம் தமதுசெல்வாக்கைப் பலப்படுத்தி வருகிறர்கள் என்ற கருத்து, நெடுநாட்களுக்குமுன்பே தெரிந்திருக்க முடியும். காலதாமதமானலும், காரியம் ஒன்றும் அதிகமாகக் கெட்டுவிடவில்லை; இப்போதாவது தெரிந்து கொண்டாரே என்றவரை திருப்தியே ஆனல் இந்த ஆபத்தை எப்படிப்போக்குவது?

"தேசியஸ்தாபனம்" இப்படி செல்வவான்களின் பிடியில் சிக்கிவிடுகிறது, என்றல் இதைப்போக்கவும், காந்தியார், ராமநாமமேகதி கண்டு, என்று கூறுவாரோ, என்னவோ நாமறியோம். மகாத்மாக்களின்மனமும் மார்க்கமும் மனனத்துக்குஉரியது; மக்களின் நடைமுறைக்கு ஏற்றவை ஒட்டிவருவதில்லை எனவே, இந்தப் "புதிய ஆபத்து" —காமராஜர் எடுத்துக் காட்டிய ஆபத்து, நீக்கப்பட என்னவழி என்பதை, மக்கள் யோசிக்க வேண்டும். நாட்டுவிடுதலை என்றல் நாட்டுமக்களின் நல்வாழ்வுக்காகப் போரிடுவது என்று பொருள் கொள்பவர்களே, உண்மையான தேசீயவாதிகள். பிரிட்டிஷ் ஏகாதிபத்யப்பிடியிலே இந்தியா சிக்கி இருக்கிறது என்றல் அதன் பொருள், பிரிட்டனிலே உள்ள, ஒவ்வொருவரும் இந்தியாவிலே ஆதிக்கம் செலுத்துகிறர் என்பதல்ல; பிரிட்டிஷ் குபேரர்கள் ஆதிக்கம் செலுத்துகிறர்கள் என்றுபொருள். துவக்கத்திலே இந்தியாவை அடிமைப்படுத்தும் போராட்டத்தை வெள்ளையர் நடத்தியபோது, வேலைவெட்டி கிடைக்காமல் வீதியில் திரிந்து வீணன் என்று கண்டிக்கப்பட்ட கிளைவ்போன்ற காசில்லாத காற்றடிப்போக்கினர்தான், நுழைந்தனர். சொந்த நாட்டைவிட்டு, நெடுந்தூரம் கப்பலில் பயணம் செய்து, ஊர்பேர் தெரியாதவர்களின் நாட்டிலே வேலைசெய்வது என்றல், மாளிகை வாசிகளாவருவார்கள்! பிரிட்டனிலே பிழைக்க வழியற்றவர்கள், தெருக்கோடிச் சண்டையில் தேர்ந்தவர்கள், ஆகியோரேவரமுடியும். அத்தகைய "படையை"த்தணைக்கு அழைத்துக்கொண்டு பண்டங்களையும் விற்றுக்கொண்டுதான், பரங்கிகள் நுழைந்தனர் பரந்த இந்தியபூபாகத்தில். இங்கேஅதுபோதுஇருந்த இளித்தவாயர்களின் உதவியால் நிலைத்தனர்; பெரும்பொருள் திரட்டினர்; திரட்டியபொருளால் துரைமாராயினர், பிரிட்டனிலே திரும்பிச் சென்று, பிரபுக்களாயினர், பிரிட்டிஷ் அரசியலிலேயும் செல்வாக்குப் பெற்றனர்;பிரிட்டனிலே இருந்த பரம்பரைப்பணக்காரர்கள் இவர்களைப் புதிய பணக்காரர் என்று முதலில் கேலிசெய்தனர். என்றபோதிலும், நாளாவட்டத்திலே இவர்கள் பிரிட்டிஷ் அரசியல் வாழ்விலே செல்வாக்கான இடங்களைப் பிடித்துக்கொண்டு, ஆளும் வர்க்கமாயினர். அவர்களே பிறகு, "சாம்ராஜ்ய சிற்பிகள்", "ஏகாதிபத்யக் காவலர்கள்' என்று அழைக்கப்பட்டனர். அந்தக் கூட்டத்தினரின் ஆதிக்கத்தைத்தான், "ஏகாதிபத்யம்" என்று பொதுப் பெயரால் அழைக்கிறோம். அலசிப் பார்த்தால், பிரிட்டிஷ் முதலாளிமார்களின் பிடியிலே "இந்தியா" சிக்கிக்கொண்டது என்றுதான் ஏற்படும். இந்தியாவின் வைசிராயாக இருந்த லின்லித்கோ பிரபுவுக்கு, இப்போதுஎன்ன வேலை? இம்பீரியல் கெமிகல்ஸ் கம்பெனியிலே ஒருடைரக்டர், அதாவது உலகெங்கும் வியாபித்துள்ள மிகஇலாபகரமான ஒரு வியாபாரக் கம்பெனியிலே அவர் ஓர் பங்குதாரர், முக்யஸ்தர். அதுமட்டுமல்ல பெரிய பண்ணைக்குச் சொந்தக்காரர். ஆள்பவராக இங்கேவருபவர்கள் பெரும்பாலும், பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தவராக, அல்லது அதன் ஏஜண்டாக இருப்பார். ஏகாதிபத்யம், ஏகாதிபத்யம் என்று நாம் கண்டிக்கும் போது, நாம் கண்டிப்பது, உண்மையிலே, சுறண்டிச் சுகபோகத்திலே புரளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தைத் தான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் என்ற ஏற்பாடு, பிரிட்டனிலே, கடல்வியாபாரத்தால் பணக்காரர்களான ஒரு சிறுகூட்டத்தார், தமது நாட்டு அரசியலிலே ஆதிக்கப் தேடிக்கொண்டு, அதன் துணைகொண்டு, இந்தியா, போன்ற பரந்த, சிக்கல் நிறைந்த இடங்களிலே, நுழைந்து, ஏராளமான பணத்தை "முதல்" ஆகப்போட்டு மிகக்குறைந்தகூலிகொடுத்துப் பாட்டாளிகளை அமர்த்தி, அங்கே கிடைக்கும் இயற்கைச் செல்வத்தைச் சுரண்டுவது, அதனுல் பெருத்த இலாபம் அடைவது, மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்துகொண்டுபோய், செய்பொருளை இங்கே அனுப்புவது, அதன்மூலம் ஏராளமான பணம் இலாபமாகப் பெறுவது என்பது தான். இந்தச்சுரண்டல் யந்திரம் இப்போது, அதிகநாள் அதிகவேகமாக வேலை செய்ததால், தேய்ந்து போயிருக்கிறது. இந்த யந்திரம் தேய்வு அடைந்திருக்கும், இதே நேரத்தில், சுதேசி சுரண்டல்யந்திரம் அமைக்கப்பட்டு, வேலை செய்து வருகிறது. பிரிட்டிஷ் யந்திரத்தைப் பழுதுபார்ப்பது, அல்லதுபுதிதாக்குவது என்பதைவிட, ஏற்கனவே தயாராக இருக்கும் சுதேசிசுரண்டல் யந்திரத்துக்குத் தேவையான, உதவி செய்து, பங்காளிகளாகிவிடுவது, சுலபம்,என்றநிலையில்,இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்யவாதிகள்உள்ளனர். ஆகவேதான், ஏகாதிபத்யக்காரர்கள், புன்னகை புரிகிருர்கள், பேரம் பேசுகிருர்கள், ஜெய்ஹிந்து கூறுகிருர்கள், இந்தியஐக்கியத்தை வற்புறுத்துகிருர்கள், தேசபக்தியின் அவசியத்தைக்கூட எடுத்து உபதேசிக்கிருர்கள்.

இரண்டு பெரியபோரிலேசிக்கிய பிரிட்டனின் பொருளாதார சக்தி சொறுங்கிப்போயிருக்கிறது. கடல் அரண் இருந்ததால் மட்டுமேபிரிட்டன் தன் சுதந்திர வாழ்வைக்காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. அரசியல்வாழ்வு காப்பாற்றப்பட்டதேயொழிய, பிரிட்டிஷ் பொருளாதார வாழ்வு சொறுங்கிவிட்டது. எனவே, இப்போது, பிரிட்டனல், முன்போல, ஏராளமானபணத்தை மூலதனமாக, இங்கேயோ, அல்லதுவேறு இடங்களுக்கோ அனுப்பி, சுரண்டல் யந்திரம் அமைக்கமுடியாது. பிரிட்டனுக்குள்ள சக்தி குறைந்துவிட்டது என்பதுமட்டுமல்ல, அதேசமயத்திலே, இந்திய முதலாளித்வம், புதுமுறுக்குடன் இருக்கிறது. பணவிஷயம், சுரண்டும் முறைக்குத் தேவையான மூளைச்சுறுசுறுப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும, சுதேச முதலாளித்வம்,பிரிட்டனிடமோ, வேறு வெளிநாட்டினிடமோ தயவுகோர வேண்டியநிலைமையில்இல்லை. பிரிட்டனே, கடனாளி! பொருளாதாரத் துறையிலே நோயாளியுங்கூட, எனவே இந்திய முதலாளித்வத்துடன் "கூட்டாளி" யாகிவிட, துடிக்கிறது. இல்லையானல், அமெரிக்கக் கோடீஸ்வரர்கள் காத்துக்கொண்டிருக்கிருர்கள், தங்கள் வலையை வீச. இந்திய தேசிய இயக்கத்தைப்பணக்காரர்கள் கைப்பற்றுகிருர்கள் என்பது, இந்தப்புதுகூட்டாளிமுறையின், வேலைத்திட்டமேயாகும். காமராஜர், குறிப்பிடும், நிலைமை, தமிழ்நாட்டை மட்டும் பொறுத்ததல்ல; "அகில இந்தியக் காங்கிரஸ்" என்று மொத்தத்திலே கவனிக்கப்போனல், வடநாட்டு முதலாளிமார்களின் பிடியிலே, அந்த அமைப்பு இருப்பதைக்காணலாம். ஆகவே, ஜாக்ரதையாக இருப்பது, எச்சரிக்கையாக இருப்பது, தியாகிகள், வீரர்கள் ஆகியோர்களால் வளர்க்கப்பட்டகாங்கிரசைப், பணக்காரக்கூட்டம்,கைப்பற்றுமல் பார்த்துக் கொள்வது, என்று நண்பர் காமராஜர் விடுக்கும் யோசனை இருக்கிறதே, அது, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வெற்றிகரமாக நடப்பதாகவே வைத்துக்கொள்வோம், அதனல் பலன் என்ன? வடநாட்டுமுதலாளிமார்களிடம் காங்கிரசின் "சூத்திரக்கயிறு" இருக்கிறபோது, காங்கிரஸ் எப்படி, தியாகிகள், வீரர்கள், தொண்டர்கள் ஆகியோருக்காகப்பணிபுரியும் மகத்தானஇயக்கமாக இருக்கமுடியும்.

பம்பாயிலே, தோழர் நிம்கர்என்பவர், பலநாட்களாகப் பட்டினி கிடக்கிருர், ஆலைத்தொழிலாளர்களின் சில குறைகள் போக்கப்படவேண்டும் என்பதற்காக. என்ன நடந்தது? காங்கிரஸ்தலைவர்களிலே, "பெரிய தலைகள்" அப்படி ஒருசம்பவம் நடப்பதாகவே கருத்திலே கொள்ளவில்லை, வைசிராய் மாளிகையின் ராஜதந்திரச்சுழலில்சிக்கிக்கொண்டுள்ளனர்; இரண்டாம்வரிசைக்காரர்கள், ஒரு ஆசாமி பட்டினி கிடக்கிருர், அதுவும் சாகும் வரை பட்டினி இருக்கப்போகிருராம்,தன்சொந்தக்காரியத்துக்காக அல்ல, தொழிலாளர்களின் குறைகளைப்போக்கவே இப்பட்டினி துவக்கிஞராம், என்பதை அறிந்துள்ளனர். அறிந்து என்ன செய்தனர்? பட்டினி இருப்பதை நிறுத்திக்கொள்ளும்படி தோழர் நிம்கருக்கு யோசனைகூறினர்! "ஐயா! என்னைத் தொந்திரவு செய்யவேண்டாம். உங்கள் செல்வாக்கு முழுவதையும், மில் முதலாளிமார்களிடம் போய்உபயோகித்து, என்வேண்டுகோளுக்கு அவர்களைச்செவிசாய்க்கச்சொல்லுங்கள்" என்றதோழர் நிம்கர் கூற அனுப்பிவிட்டார். என்ன நடந்தது பிறகு? ஆலைமுதலாளிகளிடம் சென்றனரா காங்




ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி
**ஜெயராம் காயசுத்தி லேகியம்**
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

கிரஸ்தலைவர்கள்? இல்லை! ஏன்? முடியாது!! ஆலை அரசர்கள், இவர்களின் பேச்சைக்கேட்கமாட்டார்கள். அவர்களின், "டெலிபோன்" சத்தம்கேட்டால் சட்டமும் சட்டத்தைக் காப்பாற்றுவதற்காகச் சர்க்கார் வைத்திருக்கும் படைபலமும் பரிவாரங்களும், ஓடோடி வந்து கை கட்டி வாய் பொத்தி நின்று சேவகம் செய்யும், அதுபோலவே, அந்த டெலிபோன் சத்தம்கேட்டதும், "தேசியத்தலைவர்கள்" விமானமார்க்கமாக விரைந்து வருவர், அமைதியின் அவசியம்; கட்டுப்பாட்டின் மேன்மை; தொழிலாளி முதலாளி ஒற்றுமையின் தன்மை; அகிம்சையின் அளவிலாத பெருமை ஆகியவைபற்றி உபதேசிப்பர். காந்தியாரோ, 'ராமநாமமே கற்கண்டு, அதுவே ஏழையின் பொற்குண்டு' என்று பாடுவார், ஏக், தோ, என்பார், உடனே, உரத்த குரலிலே, தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பற்றி முழக்கமிட்ட தோழர்களெல்லாம் "ராம்துன்" பாடுவார்கள், இந்த நிம்மதியான காட்சியை, குமாரி கமலாவுக்குக் காட்டிக்கொண்டே, ஆலை அரசர் புதிய மோட்டாரில் போய்க்கொண்டிருப்பார். இதனைப் பத்திரிகைப் பிரசாரபலத்தால் எவ்வளவுகாலத்துக்கு மறைத்து வைத்தாலும், பயனில்லை. உண்மை, வெளிப்பட்டே தீரும்.

இந்த நிலைமையைமாற்றக் காமராஜர், என்ன செய்ய உத்தேசிக்கிறார்? என்ன செய்யமுடியும்? தமிழ்நாட்டுத் தனவந்தர்கள், தமிழ்நாட்டுக்காங்கிரசைக் கைப்பற்றிவிட முடியாதபடி, கண்ணுங்கருத்துமாக இருந்து வெற்றி பெறுவதாகவே வைத்துக்கொள்வோம், அதனால் காங்கிரசின் தன்மையை, வடநாட்டு நிலைமையை எப்படி மாற்றிவிடமுடியும்? அதனை மாற்றுமுன்பு, இங்கே பணக்காரரின் ஆதிக்கம் காங்கிரசிலே இல்லாதபடி பாதுகாத்துத்தான் பயன் என்ன? ஏழைகளின் ஸ்தாபனமாகத் தென்னாட்டுக்காங்கிரசும், பணக்காரர்களின் பதுங்குமிடமாக வடநாட்டுக்காங்கிரசும் இருந்தால், இரண்டும் ஒன்றோடொன்று பொருந்துமா? அந்த நிலையிலே, காங்கிரசின் 'மேலிடமாக' 'குருபீடமாக' வடநாடு இருக்கும்போது, முதலாளிகளின் குரலுக்குத்தானே வலுவிருக்கும்? இந்த நிலையை எப்படி மாற்றுவது? இதுபற்றி நண்பர் யோசித்தாரா? யோசிப்பாரா? யோசிக்கவிடுவார்களா?

●

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் ஆரம்பகாலத்திலே எப்படி, பிரிட்டிஷ் முதலாளிமார்கள், மூலப்பொருள்களை இங்கிருந்து எடுத்துக்கொண்டுபோய், அதே பொருள்களை செய்பொருளாக்கி அதிக விலைக்கு இங்கே கொண்டுவந்து விற்று, இரட்டைஇலாபம்பெற்றார்களோ அதேநிலைமையில்இப்போது வடநாட்டார் செய்து வருகிறார்கள். அதாவது, சுதேசி சுறண்டல் யந்திரம், வடநாட்டில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தயந்திரம் தென்னாட்டைச் சுறண்டுகிறது. பஞ்சு ஆலைகள், இரும்புத்தொழிற்சாலைகள் பலரசாயன சாலைகள், மோட்டார்உற்பத்தி, மருந்து, முதலிய எண்ணற்ற பலதுறைகளிலே, வடநாடு—குறிப்பாக பம்பாய், குஜராத் பகுதிகள்—மேனாடு கண்டு பொறாமைப்படக்கூடிய அளவுக்கு முன்னேறி விட்டது. ஒரு பிர்லாவுக்கும் டாட்டாவுக்கும் இருக்கும் செல்வாக்கைக் காமராஜர் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும்.

அவர்கள் "இரட்டைக்குழல் துப்பாக்கிகள்" — தேசியமும் அவர்கள் கூப்பிட்ட குரலுக்குஓடிவந்து குற்றேவல்புரியும் ஏகாதிபத்யமும், அவர்களின் இச்சையை அறிந்து பூர்த்திசெய்ய எப்போதும் சித்தமாகஇருக்கும். டாட்டா கம்பெனியின் அதிகாரியான சர். அர்தீசர் தலால், வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினரானார். பொதுமக்களுக்கும் அவருக்கும் என்னதொடர்பு? ஏதேனும் கட்சிக்குப் பிரதிநிதியா? இல்லை! டாட்டாவின் முத்திரை பொறிக்கப்பட்டவர், எனவேஅவருக்கு, வார்தாவும்இடம்தருகிறது, வைசிராய் நிர்வாக சபையிலும் இடம் கிடைத்தது. ஆண்டு பல சிறையிலேகிடந்த பண்டித ஜவஹருக்கு, வைசிராய் நிர்வாக சபையிலே இருக்க அழைப்பு அனுப்பிய அதே வைசிராய், டாட்டா கம்பெனி டைரக்டர், தோழர் ஜான் மத்தாய்க்கும் அழைப்பு அனுப்பினார்! போஸ்படையினர்மீதுதொடரப்பட்ட வழக்கைச் சர்க்கார் சார்பிலே இருந்துநடத்திய, சர். என்ஜினியருக்கும், வைசிராய் அழைப்பு அனுப்பியிருக்கிறார். அதாவது, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், சுதேச சுறண்டல்யந்திரத்தின் துணையை நாடுகிறது. ஆகவே, நாட்டை ஆளும் பொறுப்பை, சுதேச சுரண்டல்காரர்களிடம் ஒப்படைத்துவிடத் தயாராகிவிட்டனர். இடையே லீக் தோன்றியதால், ஏகாதிபத்யம், தனது திட்டத்தை அங்கங்கே திருத்தவேண்டிநேரிட்டது. இல்லையானால், அதிகாரம் அவ்வளவும், பிர்லா—பஜாஜ்—டாட்டா, அச்சிடம் கொடுத்துவிட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், அந்த அச்சுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, தன் இலாபக் கணக்கைச் சரிபார்த்துக் கொள்ளும் சத்காரியத்திலே ஈடுபட்டிருக்கும்! தெளிவாகத் தெரிகிறது, தீவிர தேசியவாதிகள் மட்டுமே இதனை உணரமறுக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் "வார்சு" ஏற்பட்டாகிவிட்டது. "வார்சு" பாத்யதைபெற்ற பிரபுக்களே, காங்கிரசை மேலும் மேலும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்போகிறார்கள். அதற்கேற்ற பணபலம், பிரச்சாரபலம் அமோகமாக இருக்கிறது. இந்தப் பலம் பொருந்திய பிடியிலிருந்து, காமராஜர் எப்படிக் காங்கிரசைக் காப்பாற்றுவார்! காந்தியாருக்கு இது கவனிக்கப்படவேண்டிய பிரச்னையாகவே தோன்றாது! அவர் மராட்டியக் கதாசிரியர் காண்டேகார் கூறுவதுபோல "தரித்திரநாராயணனுக்கும் இலட்சுமிதேவிக்கும் திருமணம் நடத்திவைக்கும்' காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார். இப்படிக் கஷ்டத்தின்மேல் கஷ்டம் வருகிறதே என்றால், "ஏக், தோ, ராம், ராம், போல்!" என்று கூறப்போகிறார். அது போதுமா, பணக்காரர்கள் காங்கிரசைக் கைப்பற்றாதிருக்கும்படிப் பார்த்துக்கொள்ள?

●

இந்தநிலையிலேதான், காமராஜர் "திராவிட நாடு" என்றநமதுகிளர்ச்சியின் காரணத்தைக் கவனித்துப் பார்க்க வேண்டும். அந்தக் கிளர்ச்சியின் பொருள் என்ன? அரசியலிலே பதவிகள்பெறுவதா? இல்லை! முடியாது, கிடைத்தாலும் அனுபவிக்க ஆட்கள் கிடையாது!! தேர்தலுக்கான புதுகோஷமா? இல்லை! தேர்தலுக்கே நிற்பதில்லை என்று தீர்மானம். பட்டம்பதவிகள்பெறுவதற்கான பசப்பு மொழியா? இல்லை! சேலத்திலே திராவிடர் கட்சியினர் பட்டம் பெறக்கூடாது, கௌரவப்பதவிகளிலே இருக்கலாகாது என்றுதீர்மானித்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தூண்டிவிட்டதால் கிளம்பிய பேச்சா? இல்லை! பிரிட்டிஷ் ஏகாதிபத்யப் புது அரசியல் திட்டம் தீட்டும் சமயத்திலே, திராவிடர் கழகத்துக்கு அழைப்பும் இல்லை.

இதிலே வெட்கம்என்ன, வெளிப்படையாகவே கூறுகிறோம், ஒருவிதமான வசதியும் சக்தியும் இன்றியே திராவிடர்கழகம் "திராவிட நாடு திராவிடருக்கே" என்றகிளர்ச்சியைத் துவக்கி இருக்கிறது. ஏன்? புதியதோர் பொருளாதார ஏகாதிபத்யம் தயாராகிவிட்டது வடநாட்டிலே அந்த ஏகாதிபத்யம், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு "வார்சு" அதன் பிடியிலே, திராவிடம் சிக்கினால், அதன் செல்வம் வறண்டுபோகும், மக்கள் கூலிகளாவர், மாளிகைகள் குடில்களாகும், என்று உண்மையிலேயே அஞ்சுவதனாலேதான். திராவிடர்கழகத்துக்கு இந்த மூலாதாரப் பிரச்னையை வெற்றிகரமாகநிறைவேற்றக்கூடிய "சக்தி" இருக்கிறதா இல்லையா என்பது வேறு பிரச்னை. இந்தப் பிரச்னைக்கு அர்த்தமும் அவசியமும் இருக்கிறதா இல்லையா என்பதைத்தான், காங்கிரசிலே உள்ள திராவிடத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசியல் விடுதலையைத் திருப்பூர் குமரன்தலையிலே இருந்து ஒழுகிய இரத்தம், வாசிராஜன் கண்ணிலே பூண்ட தண்ணீரும் காமராஜரின் குரலிலே ஏற்பட்ட புண்ணும், மற்றும் எண்ணற்ற வாலிபர்களின் உழைப்பும் வாங்கித்தருகிறது. அரசியல் விடுதலை என்றால், அரசியலை நாமே நடத்தும் உரிமை. இந்த உரிமையை, பொருளாதாரப் பலம் படைத்தவர்கள் எளிதிலே கைப்பற்றுகிறார்கள்; அதற்குக்காமராஜரின் பேச்சே போதுமான ஆதாரம். இந்த நிலை, தமிழ் நாட்டைவிட, வடநாட்டில் மிக அழுத்தமாகவும் அசைக்கமுடியாத தன்மையிலும் இருக்கிறது, அந்த வடநாட்டுக்குத்தான் அரசியல் அதிகாரத்தின்தலைமைப்பீடமும் கிடைக்கிறது. அந்த வடநாட்டுப் பிரபுக்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஏஜண்டுகளின் கூட்டாளிகளாக இருக்கிறார்கள்! சங்கிலித்தொடரைக் கவனித்துக்கொண்டே போனால், மீண்டும், இலண்டன் தெரியும்!! இடையே இருந்து இணைப்புவேலை நடத்துவதுவடநாடு. திராவிடநாடு திராவிடருக்கே என்பது, இந்த இணைப்புக்கு ஒரு வெட்டுவேண்டுமென்கிறது. வெட்டிவிட்டால், திராவிடம் தனி, அதன் நிலைமையை வடநாட்டுச் சுதேசி சுறண்டல்யந்திரம் ஒன்றும் செய்யமுடியாது.

இந்தக் கிளர்ச்சியை, மடியவிட்டு விட்டாலோ, பகைக விட்டுவிட்டாலோ, என்ன நேரிடும்? பிரிட்டிஷ்—பனியா கூட்டுச் சுறண்டலுக்குத் திராவிடம் பலியாகித் தீரவேண்டும். பிரிட்டிஷ்—பனியாக் கூட்டுச் சுறண்டலுக்கு, எல்லை, சிந்த, பஞ்சாப், அசாம், வங்காளம், பலியாகாது, அவை A C என்று தனித்தனியாட்டாரங்களாகின்றன. திராவிடமோ, பிரித்தானியர், பார்ப்பனியர், பனியா என்னும் மூவகைப் பிடியிலே சிக்கியதோடு இனி B. (பி) தொகுதியில் சேரும்படி, அவர் மீது அரசியல் திட்டத்தைத் திணிக்கிறார்கள், இந்த B தொகுதியில், பம்பாய், ஐக்யமாகாணம், ஒரிசா, மத்யமாகாணம், சென்னை, இவைகள் இருக்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறது. பம்பாயில்தான் பிரிட்டிஷ்ஏகாதிபத்யத்தின் 'வார்சு' அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வார்சுக்குத்தான், ஐக்ய மாகாணத்தில் வளர்ந்துள்ள விடுதலை இயக்கம் வாழ்க்கைப்பட்டுவிட்டது, இந்தத் தொகுதியிலேதான் பிர்லா—பஜாஜ்—டாட்டா அச்சு இருக்கிறது. இந்தப் பிரமாண்டமான சுதேசி சுறண்டல் யந்திரம். இதன் மூலதனமும் மூளைபலமும், பிரச்சாரபலமும் அமோகம்; இந்த அச்சுதான் இன்று காங்கிரஸ் இயக்கத்தையே நடத்திவைக்கிறது என்றுகூறலாம். பிர்லா-பஜாஜ்-டாட்டா அச்சுக்குத் துணை அச்சுதான், பிரிட்டனில் உள்ள நப்பீல்டு போன்ற பிரபுக்களின் அச்சு! இந்தச் சுதேசி சுறண்டல் யந்திரம், திராவிடத்திலே உருள இடந்தருவதே, B, தொகுதி என்ற முறையிலே சென்னையைப் பம்பாயுடன் தொகுப்பது! யுத்தகாலத்திலே, பொருள்களுக்கும் இடங்களுக்கும் எதிரி மூலம் சேதம் ஏற்படாதிருப்பதற்காகப் பூச்சுவேலை செய்து மறைப்பார்கள். அதுபோல திராவிடத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கும் இந்த அச்சுக்கு, மூவர்ணப் பூச்சு இருக்கிறது. அந்தப் பூச்சு கண்டு பூரித்து, இதுவரையில் அந்த அச்சைக் கொழுக்கவிட்டு விட்டனர் நமது காங்கிரஸ் தோழர்கள்.

இனிவரும் நாட்களிலே இந்த அச்சுக்கு, ஐந்து மாகாணங்களில் வேலை இராது; (எல்லை, பஞ்சாப், சிந்து, அசாம், வங்காளம்) எனவே அந்த அச்சு, அதிகரித்தபசியுடன் திராவிடத்தின்மீதுபாயும்! திராவிடம் அந்த அச்சின் பாய்ச்சலைத் தாங்கும் சக்தியில் இல்லை! எனவேதான் இப்போதே விழித்துக் கொண்டாக வேண்டும் என்கிறோம். புது அரசியல் திட்டத்திலே B தொகுதியில் திராவிடநாடு சேர்க்கப்படக்கூடாது தனித்தே இருக்கவேண்டும், மத்யசர்க்காருடன், பாதுகாப்பு ஏற்பாடுக்காக, மற்றத் தொகுதிகள் தொடர்பு வைத்துக்கொள்வதுபோல் வைத்துக்கொள்ளலாம்; பனியா அச்சுடன்சேருவதுகூடாது, ஆபத்து என்பதைக் காங்கிரசிலுள்ள திராவிடர்கள் உணரவேண்டும்.

காமராஜர், "பணக்காரர்கள் காங்கிரசைக்கைப்பற்றாதபடிபார்த்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னார். பணக்காரர்கள் காங்கிரசைக் கைப்பற்றுவது மட்டுமல்ல, பிர்லா—பஜாஜ்—டாட்டா அச்சின்மூலம், திராவிடத்தையே, பம்பாய்க்குப் பிடி ஆள் ஆக்குவதற்கான வேலை நடந்து வருகிறது. இந்தப் புதிய பேராபத்தைத்தவிர்க்கத்தான், நாம், "திராவிடநாடு திராவிடருக்கே" என்று கூறுகிறோம். கேலி செய்யப்பட்டோம், கவலை இல்லை; இப்போதாவது, நண்பர்கள் நமக்கு வர இருக்கும்புதிய ஆபத்தை உணர்ந்து, B, (பி) தொகுதியிலே (திராவிடநாடு) சென்னையை இணைக்கக்கூடாது என்றுகிளர்ச்சிசெய்தால்போதும்.

திராவிடர் கழகத்தலைவர் பெரியார், காங்கிரசில் சேரவும் தயார் என்று பல கூட்டங்களிலே பேசிவருகிறார். ஏன்? ஏகாதிபத்ய எதிர்ப்பு ஒழிப்பு என்பவற்றிலே, அவருக்கோ அவரைப்பின்

(அடுத்த பக்கம் பார்க்க)

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100-கே. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.

பற்றுபவர்களுக்கோ, காங்கிரஸ் கூறுவதைக் கேட்கக்கூடாது என்ற கருத்து கிடையாது. அந்த "எதிர்ப்பு" நடத்தி விட்டு இந்தத்தொகுப்பு (B) (பம்பாயுடன் தொகுப்பு) ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சந்தான், திராவிடர் கழகத்தார், கொண்டிருந்தது. அந்த அச்சம் எவ்வளவு நியாயமானது என்பதை இப்போது தொகுதி அமைப்புத் திட்டம், நிரூபித்துவிட்டது. திராவிடத்தை பிர்லா—பஜாஜ்—டாட்டா அச்சகத்தில் சேர்த்திருக்கிறார்கள்! தேர்க்காலிலே, திராவிடம்!! பொருளாதாரத்திலே பிரிட்டனும் மிஞ்சிய வட்டாரத்துக்குத்தான் திராவிடம் பலியிடப்படுகிறது. இந்நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான், திராவிடர் கழகம் என்ற தனிஸ்தாபனம் [illegible] யொழிய, வேறு [illegible] இல்லை. இதனை திராவிடர் கழகத் [illegible], 'விடுதலை' 17—6—46 தலையங்கத்திலே விளக்கமாக எடுத்துக்காட்டியிருக்கிறது.

"குறைந்த அளவு வடநாட்டார் சம்பந்தமாவது அவர்களது ஆதிக்கமாவது இல்லாதிருக்குமானால். அதாவது வடநாட்டார் பிடியிலிருந்து காங்கிரஸ் விடுபடுமானால் தாம் உடனே [illegible] இல்லை என்றும் பெரியார் சொல்லி வருகிறார்."

உண்மையில் காங்கிரசினிடம் அதன் அமைப்பு கொள்கை ஆகியவைகளைப் பற்றித்தான் எந்த உண்மைத் தொண்டருக்கும் அதில் சேருவதற்கும் [illegible] காரணம் இருக்கலாமே ஒழிய, காங்கிரஸ் என்கின்ற பெயரிடம் யாருக்குந்தான் வெறுப்பு விரோதம் இருக்க முடியும். ஆகையால் காங்கிரசில் ஈ. வெ. ரா. சேருவதும், தொண்டாற்றுவதும் இந்த மாகாணத்தில் ஒரு சுதந்திர [illegible] வெளிமாகாணத்தார் [illegible] மத்திய காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் இணைந்து வேலைசெய்யும் ஒருதனி சுதந்திர முடையதாய்இருப்பதைப் பொறுத்தும் திராவிடர் கழகக் கொள்கையை ஏற்றுக்கொள்வதைப் பொறுத்துமே ஒழிய மந்திரிவேலைக்கோ தேசபக்த பட்டம் பெறவோ அல்ல, என்பதை வாசகர்கள் உணரவேண்டுகிறோம்." என்று விடுதலை தீட்டியிருக்கிறது.

அகில இந்தியக் காங்கிரசுக்குக் கட்டுப்பட்டிலேமையில், வடநாட்டு ஆதிக்கம் கூடாது என்று பேசவோ. B தொகுதியில் சென்னையைச் சேர்க்க கூடாது என்று பேசவோ, சென்னைமாகாணக் காங்கிரசுக்கு அதிகாரம் இராது; பொறுத்தமாகவும் இருக்க முடியாது. எனவேதான் பெரியார், காங்கிரசில் சேருவதானால், இந்தமாறுதல்கள் தேவை என்று கூறுகிறார்.

இப்போது உடனடியாகச் செய்ய வேண்டிய முக்கியமானவேலை சென்னை மாகாணத்தை 'பி' (B) தொகுதியில் சேர்த்திருப்பதைக் கண்டிப்பாய்க் கண்டித்தாக வேண்டும்; அந்தப்புது அடிமைத்தளை திராவிடத்தின்மீது பூட்டப்படாதபடி பார்த்துக்கொண்டாகவேண்டும்.

காமராஜர் இந்தக்கிளர்ச்சியைத்தவக்கினால், திராவிடர்கழகம், அதிலே,முழுப்பங்கு எடுத்துக்கொள்ளத் தயாராகவே இருக்கிறது. "பி" தொகுதியில் சேருவதால் உண்டாகக்கூடிய சாதகபாதகங்களைப்பரிசீலனை செய்ய, சென்னைமாகாணத்தைப் பொறுத்தமட்டிலே உள்ள [illegible] மாநாடு கூட்டப்பட்டால் B-தொகுதியிலே சென்னை இணைக்கப்படுவதால்கேடு என்பது விளக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்படும் என்பதிலே நமக்குப் பூரணநம்பிக்கை இருக்கிறது. அந்த விளக்கம் ஏற்பட்டபிறகு சென்னைமாகாணக் காங்கிரஸ், சென்னைமாகாணம் B. "பி"தொகுதியில் அதாவது மார்வார் தொகுதியில் பிர்லா—பஜாஜ்—டாட்டா அச்சில்சேர்க்கப்படக்கூடாது, என்ற கிளர்ச்சியைத் துவக்க முன்வந்தால் திராவிடர் கழகம் அந்தக்கிளர்ச்சியிலே இரண்டறக்கலக்கும் அந்த நோக்கத்துடன், காங்கிரசிலேயே சேரவும் தயங்காது பணக்காரர்கள் காங்கிரசைக் கைபற்றுசபடிபார்த்துக்கொள்ளவேண்டும் என்று பேசுவதிலே என்ன பிரயோஜனம்? தலைக்குமேலே உட்காரப் பார்க்கும் சர்க்கசதனை டல்பத்திரத்திலிருந்து தப்பிப்பிழைக்க என்ன வழி? இதனைக் காமராஜ் யோசித்துப்பார்க்கவேண்டும்—விரைவாக.

# பாரதிதாசன் நிதி

கவிஞர் நிதிக்காகஇதுவரைசேர்ந்துள்ள தொகை:—

## ரூ. 17694—8—0

நிதியளித்தவர்கள் விபரம் கீழே தரப்படுகிறது:—

கல்லிடக்குறிச்சித் தோழர்கள் ஐந்து ரூபாவீதம் கொடுத்தவர்கள்:— பார்த்தசாரதி. தாத்தாச்சாரியார், வரதராஜுலு இராமகிருஷ்ணன், இராசகோபால், சுந்தரமூர்த்தி, கண்ணுசாமி, உழவன், ஆதிகேசவன் லாரி சர்வீஸ், மு. யாகூப், பூவராகன், எதிராஜுலு. மேற்படியூர் மூன்று ரூபா அளித்தவர்கள்:— ரகீம், கந்தசாமி, கோதண்டபாணி, என். வி. டி. எஸ். சம்பனி, மீனாட்சி சுந்தரம், ராமமூர்த்தி, மொயதீன், ராமச்சந்திரன், மேற்படியூர் இரண்டு ரூபா அளித்தவர்கள்:— துரைசாமி, பத்மநாபன், கண்ணன், ரத்னம், அபூபக்கர், சம்பாரன், மு. ஈசப், சாமுவேல், செல்வராஜ் ராமமூர்த்தி வாசு. ஆராவமுது டி. நாயுடு, தங்கவேல், கன்னய்யா, இப்ராகிம் ராமசாமி, சேஷாத்திரி, வரதாஜுலு.வேலாயுதம், நாராயணன், வினைத்தீர்த்தான், அப்துல், ரத்னம், கன்னய்யா, ஜபார், ராமச்சந்திரன், விசுவநாதன், அரிபுரநாயக்கர், ஜெகந்நாதன்; மேற்படியூர் ஒரு ரூபா அளித்தவர்கள்:—அ: அஜீஸ், பாண்டுரங்கம், முனுசாமி, இராமலிங்கம், இராமசாமி, நடராசன், இராதாகிருஷ்ணன், நரசிம்மராவ், ஞானசம்பந்தம், மகாலிங்கம், தனிகாசலம், எம்.அப்துல், சண்முகம் வீராசாமி, ரத்னம், ராமச்திரன், நடராசன், இராஜம், சண்முகம், அரங்கநாதன் இராமசாமி,முனியப்பன், பிச்சு, அருணாசலம், நாராயணன், சிங்காரம், ஆகியோர்.

கும்பகோணம் தோழர்கள்:— சுப்பிரமணியம் ரூ 2; சீனுவாசன் ரூ 2; திருநாவுக்கரசு ரூ 2; வடமலை ரூ 2; தங்கவேல் ரூ 1; நாகராசன் ரூ1; கணபதிபிள்ளை ரூ 1; கான்பூர் எல் எ. கி. நடேசன் ரூ 5; லக்னோ தோழர் எம் டி. ரூ 2; தூத்துக்குடி கே.வி.கே. சாமி ரூ5; திருச்சி பருமார்க் வைரக்கம்பெனியார் மூலம் மீனாட்சிசுந்தரம் ரூ 5; கிருஷ்ணன் ரூ 2; பழனிச்சாமி ரூ 2; ஒரு ரூபா:— துரைசாமி, காமாட்சி, அழகிரிசாமி, மாணிக்கம், முத்துச்சாமி, சுப்பிரமணி, ரெங்கசாமி, வச்சிரவேலு, மாரியப்பா, வீராசாமி, மூக்கையா, ரெங்கன், ராஜீ, நாகமுத்து, மாணிக்கம்; எட்டணா:— சந்தானம், பிச்சை, கே. சந்தானம், குப்புச்சாமி ஆகியோர். சென்னைத் தோழர் ஷேக்நாவத் ரூ 10; மயிலாப்பூர் எஸ். அண்ணாமலை ரூ 5; திருமங்கலம் எ. பி. ஆர். இராசப்பா மூலம் ரூ 10—8—0; பேணுக்குறிச்சித் தோழர்கள்:— வி. காமாட்சி மூலம் ரூ 47—0—0; பொன்மலை பி. நாராயணசாமி ரூ 2; வாலாஜாபாத் எஸ். திருநாவுக்கரசுரூ5; ஜோலார்ப்பேட்டை எஸ். இலக்குவன்மூலம் ஒருரூபா அளித்தவர்கள்:— கோவிந்தன், கிருஷ்ணன், சத்தியதேவ், சுப்பையன், துரைராஜ், தாமோதரம், கிருஷ்ணமூர்த்தி, சிவசுப்பிரமணியம், சோமசுந்தரம், கணேசமூர்த்தி, கோவிந்தசாமி, வடிவேலு, நாராயணசாமி, ஸ்ரீதரய்யா, கோபால், சின்னதம்பி, கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனன், திருமூர்த்தி நாகராசன்,கோபாலகிருஷ்ணன், சண்முகசுந்தரம். தேவராசன், நடராசன், சொக்கலிங்கம், கமலம்மாள், இராதாம்பாள், மோகனாம்பாள், சீதாபதி, சரஸ்வதி, எஸ். இலக்குவன் ரூ 5; பி. வி. துரைசாமி ரூ 2—1—10; வேணுகோபால் ரூ 2—2—2.

உப்பாத்தூர் இளங்கோவன் ரூ 1; கிருஷ்ணன் கோயில் தோழர்கள்:— ஒரு ரூபா அளித்தவர்கள் குட்டன், தாணுவன், கல்லபெருமாள், செந்தூரான், நடராசன், பூதலிங்கம், பகவதி, கணபதி, கோபாலகிருஷ்ணன், கிருஷ்ணன், உதுமான், சுப்பிரமணியன், எட்டணா அளித்தவர்கள்:— சொக்கலிங்கம், கணபதி, காந்திமதிநாதன்,பிச்சைநாதன்,கிரதான் பேட்டைத்தோழர் கே. நடராசன்மூலம் ரூபா 21—2—0; தாத்தய்யங்கார்ப் பேட்டை எம். எஸ். என். இராசன்ரூ1 ஆத்ரா ஜி. முனுசாமி ரூ2; சிங்கப்பூர்த் தமிழ்முரசு ஆபீஸ் மூலம் மலேயாத் தோழர்கள் ரூபா 238—11—0.

# கிராமணியார் கூறுகிறார்!

●

(வெற்றிவீரன்)

இந்தியா ஒரு நாடு அல்ல இது பல நாட்டு நாகரிகம், கலாச்சாரம் கொண்ட உபகண்டம். இதில் பல மொழியினர், நாகரிகத்தினர் வாழ்கின்றனர் என்று திராவிடத்தோழர்கள் கூறினால் அவர்களுக்குத் தேசியத்தாள்களும், தோழர்களும் அளித்த பட்டம் தேசத்தை துண்டாடும் துரோகிகள், வகுப்புவாதிகள், பிரிட்டிஷாரின் கூலிகள்முதலியன. அவர்களை சற்று அயர்ந்துதோழர் ம. பொ. சிவஞான கிராமணியார் வெளியிட்டுள்ள தமிழ்முரசு இரண்டாம்புத்தகத்தில் 'தமிழர்க்குச் சுயநிர்ணயம்' என்ற கட்டுரையைப் படித்தவிட்டு பிறகு கூறட்டும் திராவிடத் தோழர்கள் கூறியதில் குற்றம் என்ன என்பதை!

தோழர் கிராமணியார் அந்த இதழில் பிரிட்டிஷ்திட்டத்தை விளக்கு முகத்தான் பொதுவான சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். இக் கருத்துக்கள் திராவிடத் தோழர்களால் முன்பேவெளியிடப் பட்டது ஆனாலும் இந்து தேசியத் தோழர்களின் சிந்தனைக் குறியது அதை கவனிப்போம்.

"இந்தியா பல்வேறு நாடுகளைக் கொண்ட ஒரு உபகண்டமாகத் திகழ்கின்றது. இந்தியாவிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இனத்தினர்வாழ்கின்றனர். அந்த இனங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி மொழி, நாகரிகம், சரித்திரம் ஆகியவைகள் இருக்கின்றன. இங்ஙனம் பல நாட்டுப் பண்புகள் அமைந்திருப்பதினாலேயே "இந்தியாவை ஒரு உபகண்டமென்று சொல்லவேண்டியிருக்கின்றது" என்று கிராமணியார் கூறுகிறார். இவ்வுண்மையைத் திராவிடத் தோழர்கள் கூறியபோது வசைமாரியும், வம்பும் பொழியப்பட்டது. இப்போது?

"ஆங்கிலேயன் நன்மைக்காகஇந்தியாவை ஒரே நாடு என்றும் இந்தியர் ஒரே இனத்தினர் என்றுங்கூறி வந்தனர். பல ஆண்டுகள் காங்கிரஸ் பணிபுரிந்தும்இந்தியாவைஒரே நாடாகவும், இந்தியர் ஒரே இனமாகவும் காணமுடியவில்லை" இதுவும்கிராமணியார் கூறுவது.

"இந்திய சரித்திரமென்றோ, நாகரிகமென்றோ தனியாகஒன்றுஇல்லை, இந்தியாவில் எவர்தயவுமின்றிதனி அரசு புரியக்கூடிய அளவுக்கு மக்கள் தொகை, பொருள்வளம், நிலவளம் ஆகியவைகள்கொண்ட பதினோரு இனங்களும் அவைகளின் தாயகங்களும் உண்டு." கூறுவது கிராமணியார். தேசத்தைத் துண்டாட நினைக்கும் திராவிடத்துரோகிகளல்ல!

"தனித்தனி அரசாக அமைந்தால் தான் வருங்கால சுதந்திர இந்தியா அமைதியாக நிலவமுடியும்" என்று கூறுகிறார். கூறுங்கள் நமக்கும் அவருக்கும் வித்தியாசம் என்ன?

'நாட்டை, இனத்தை,மொழியை அடிப்படையில் பிரிக்கவேண்டுமே ஒழிய மதத்தை அடிப்படையாகப் பிரிக்கக்கூடாது. அப்படி மதத்தை அடிப்படையாகக் கொண்டுபிரித்தால் தமிழ் நாட்டில் இந்து ராஜ்ஜியம்தான் ஆட்சிபுரியும், இதைத்தமிழர்கள்ஏற்க மாட்டார்கள்." கூறுவது மதத்தை மாய்க்கும் மமதை ஆளர்களல்ல, தேசியத்தோழர்சிவஞான கிராமணியார்.

"அப்படி தமிழ்நாடு தனிநாடு ஆக்கப்பட்டால் அது தன்னுடன் தொடர்புகொண்டுள்ள தெலுங்கு, கன்னட, கேரள நாடுகளுடன் ஓர் சமஷ்டி ஏற்படுத்திக்கொள்ள முடியும்." இதைத்தான்நாமும் திராவிட நாடு என்ற அடிப்படையில் வழங்குகின்றோம். ஆகவே தேசபக்தர் சிவஞான கிராமணியார்கூறுவதற்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தைச் சிந்திக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குறிப்பு:— சாதியைக் குறிக்கும் அடையாளப் பெயர்கள் பொறிக்கப்படுவது எமதுகொள்கையல்ல. ஆனல், இக்கட்டுரையாளர் அதனை ஆங்காங்கு கையாண்டுள்ளார். ஆகவே "கிராமணியார்" என்று பெயரைக் குறிப்பிட்டோம்.

●

# காஸ்பேரி

புத்தகசாலை குமாஸ்தாவாக வாழ்க்கையை ஆரம்பித்து, புகழ்பெற்ற உன்னத பதவியை அடைந்துள்ள, ஸினர் டி. காஸ்பேரி இத்தாலியில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல்களின் விளைவாக, வாரம் ஒன்பது பவுன் சம்பளம் பெறும் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

ஸினர் டி காஸ்பேரி பிரம்மாண்டமான வாடிகன் புத்தகசாலையில் புத்தக விபர ஜாபிதா தயாரிப்பு வேலையைச் செய்து தமது ஜீவனத்தை நடத்திவந்தார். அந்தவேலை முடிந்தபிறகும் இவர் பரமஏழையாகவே இருந்தார். 1944ல் இத்தாலி சரணடைந்த பிறகு அமைக்கப்பட்ட போனேமி மந்திரி சபையில் வெளிநாட்டு மந்திரியாகநியமிக்கப்பட்டபோது, நீலநிற உடுப்பு ஒன்றவாங்கிக் கொள்வதற்குத்தமக்குக் கொஞ்சம் முனபணம் வேண்டுமென்று கேட்டதுதான் இவரதுமுதல் வேண்டுகோளாயிருந்தது. கண்ணியமாக அணிந்துகொள்ளக்கூடிய உடுப்பு ஒன்றுகூட அவரிடம் அப்பொழுது இல்லை.

இத்தாலிய அரசியலில் சர்வாதிகாரியாய்இருந்துவந்தமுஸ்ஸோலினி 1920ல் இவரைக் கைது செய்தார். அதன் விளைவாக இரண்டு வருஷ சிறைத் தண்டனையை இவர் அனுபவிக்க நேர்ந்தது. விடுதலையானதும் இவர் வாடிகனுக்குப் போய்ச் சேர்ந்தார்.

மலைமீது ஏறுவதும், லத்தின்காவியங்களிலிருந்து ஏதாவது மேற்கோள்கள் சொல்லி பத்திரிகைக்காரர்களைத் திணர அடிப்பதுமே இவருக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்குகள்.

●

மதிப்புரை.

## தமிழர் யார்?

ஆசிரியர் யாழ்ப்பாணத்து நவாலியூர் ந. சி. கந்தையாபிள்ளை.

வெளியிடுவோர்:—

முத்தமிழ் நிலையம், சென்னை.

**விலை 8 அணா.**

உலகத்தில் எந்த இனமாவது முன்னேற்றமடைந்திருக்கிற தென்றால் முதலில் அந்த இனம் தனது நிறமையை, வல்லமையை உணர்ந்து அதைமீண்டும் பெறுவதற்கு தன்னைத் தயார் செய்து கொண்டுவந்திருக்கிற தென்பதை அறிகிறோம். அதுபோலவே, தமிழ் இனம் முன்னேறவேண்டுமானால் அது தனது வல்லமையை திறமையை உணரவேண்டும். அவ்வாறு உணர்த்தக்கூடிய நூல்கள் வெகுசிலவேஉள்ளன. தமிழர் யார்? என்னும் நூல் தமிழரின் பெருமையை விளக்குகிறது. அவர்கள் எவ்வளவுதூரம் உலகில் பரவிக்கிடந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதன் ஆசிரியர் பல மேற்கோள்கள் எடுத்துக்காட்டியன்ளார். இந்நாளில் தமிழ்மக்கட்கு இந்நூல் பெரிதும் பயனுள்ளதாகயிருக்குமென்று நம்புகிறோம்.


## இளைஞன்

எழுச்சிமிக்க இளைஞர்களின் எழுத்தோவியங்கள் நிறைந்த மாதப்பத்திரம்.

அழகிய அட்டையுடன் ஈரோட்டுக்காகிதத்தில் ஜூலை மாதம் முதல்வெளிவரும்.

இளம் எழுத்தாளர்களிடம் கதை,கட்டுரை, கவிதைகள் வேண்டப்படுகின்றன.

**தனிப்பிரதி விலை 0—4—0.**

தொகுப்பாளர்

A. A. ரஷீத்,

இளைஞர் நிலையம்,

170 லார்டு கேபியர்வீதி,

ஈரோடு.

வாழ்த்துக் கூறி இருக்கிறார்! தெருவில் இரத்தம் ஓடச்செய்து, நூற்றுக்கணக்கானவர்களைச் சிறைப்படுத்தி, தடியடி முதல் துப்பாக்கிப்பிரயோகம்வரை செய்து, மக்களின் விடுதலைக்கிளர்ச்சியை ஒடுக்கிய மகாராஜரை, வாழ்த்தி விட்டார்! "ராஜாதி ராஜராஜமார்த்தாண்டனே! ராஜ்யரட்சகா! ராஜத்துரோகிகளான பாகிஸ்தானி முஸ்லீம்கள் நடத்திய புரட்சியைப் பொசுக்கிய தீரனே, வீரனே! நீ வாழ்க!" என்று அகமகிழ்ந்து வாழ்த்திவிட்டார்.

பனிதவழும் இமயமலைச்சாரலில் உள்ள காஷ்மீர் நாட்டிலே, பெருங்கலகம். மக்களின் கிளர்ச்சி மன்னனின் மாளிகைக்கு உலைவைக்குமோ என்று பயப்படும் அளவுக்குச் சென்றுவிட்டது. விடுதலைக் கிளர்ச்சி—பொறுப்பாட்சி வேண்டுமென்றே போராட்டம் — மன்னனின் எதேச்சாதிகாரத்துக்கு மக்கள் இரையாக வேண்டுமென்ற முறை மாறவேண்டும், மன்னன் மக்களுக்காக ஆளவேண்டும் என்ற கிளர்ச்சி அங்கு. பல்வேறு சமஸ்தானங்களிலே தோன்றியுள்ள சுதந்திரக்கிளர்ச்சிகளில் இதுவும் ஒன்று — பொதுவாகத் தோன்றியுள்ள விடுதலைக் கிளர்ச்சியிலே, இது ஓர் பகுதி; எதேச்சாதிகார ஏகாதிபத்யத்தை எதிர்க்கும் நாட்கள். அத்தேவீரம், காஷ்மீரமும்சென்றது. மன்னரின் அமுல் அமோகம். அரசாட்சியின் பல குறைபாடுகளை அகற்றவும், குடி அரசுக்கோட்பாடுகள் மிகுந்த இந்நாளிலே மன்னர்கள் தமது மக்களின் நலனையே முக்கியமானதென்று கருதவேண்டும் என்று கூறி, மக்கள் மன்றத்தை நடத்தும், தலைவர்கள் கிளர்ச்சிநடத்தினர். சமஸ்தான சர்க்கார், அடக்குமுறையைக்கையாண்டனர். சுதந்திரக் கிளர்ச்சியை, ஆட்சியைக்கவிழ்க்கும் சதிச்செயல் என்று கூறினர். மக்களால் தலைவரெனப்போற்றப்படுபவரை, மன்னர், ஆட்சிக்கு உலைவைக்க முனைத்தவன், என்று சொல்லிச்சிறை பிடித்தனர். மன்னரின் பட்டாளமும் பரிவாரமும், மக்களை அடக்கும் காரியத்தை மும்முரமாகச் செய்தனர். அரசனுல்கைதுசெய்யப்பட்டு ஷேக் அப்துல்லா, வழக்குமன்றில் நிற்கிறார். புரட்சிப்புயல் இனிஇல்லை என்று மன்னர் பூங்காவில் உலவுகிறாரோ, அல்லது பூவையர் புடைசூழ அந்தப்புரத்தில் இருக்கிறாரோ நாம் அறியோம்; ஆனல் மன்னருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட, தோழர் சவர்க்காருக்கு, இந்து மகாசபைத் தலைவருக்கு ஆனந்தம்பொங்கிவிட்டது, காஷ்மீர மன்னரின் வீரதீர பராக்கிரமத்தைக் கேள்விப்பட்டு. மன்னராவது, ஒருவேளை, வெளி உலகம், நாம் கையாண்ட கடுமையானமுறைகளைக் கேள்விப்பட்டு நம்மைக்கண்டிக்குமோ என்ற கவலைப்பட்டிருக்கக்கூடும், சமஸ்தானமக்களின் மன்றத்துக்குத்தலைவராக இருக்கும் பண்டித ஜவஹர் தந்த காரசாரமான அறிக்கையால் மன்னருக்குக் கொஞ்சம் மனக்கஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனல், சவர்க்காருக்குக் கவலையற்றகளிப்புபிறந்ததுகாஷ்மீர் சம்பவத்தால்! வாழ்த்தும் அனுப்பிவிட்டார் மன்னர் பிரானுக்கு! ஏன்? மன்னர், இந்து; மக்கள், முஸ்லிம்!!

மன்னரின் எதேச்சாதிகாரத்துக்கு எதிரிடையாக மக்கள்கிளர்ச்சிசெய்தனர் என்றால், மக்கள், மக்கள் கிளர்ச்சியையும், மன்னர் மன்னரையும், தாங்கி நிற்பர். இதுவே இயற்கை. சவர்க்கார், மன்னரல்ல, ஆனல், மக்களின் கிளர்ச்சியைக் கண்டிக்கிறார், அந்தக்கிளர்ச்சியைக் கடுமையான

# ★ வாழ்த்தினர்! ★

முறையிலே அடக்கிய மன்னரை வாழ்த்துகிறார்! ஏன்? வேறு ஒரு காரணமும் இல்லை, மன்னர் இந்து, மக்கள், முஸ்லிம் அவ்வளவுதான்!

காஷ்மீர் தேசாதிபதி இந்து; தேசமக்களில் 100க்கு 95 பேர் முஸ்லிம்கள். காஷ்மீரத்தை மகாராஜாகுலாப்சிங் என்பவருக்கு 400,000 பவுனுக்கு விலைக்குவிற்றுவிட்டனர், வெள்ளைக்கார கிழக்கிந்தியக்கம்பெனியார்; அதனாலேயே நாம் இந்து ஆட்சிக்குள் வந்துவிட்டோம், என்பது, காஷ்மீரத்தலைவர்களுள்முக்கியமானவரான, ஷேக் அப்துல்லாவின் வாதம். இவர், பண்டித ஜவஹருக்கு நண்பர்.

பெரும்பாலான இந்துக்கள்உள்ள ஹைதராபாத் சமஸ்தானம், முஸ்லிம் மன்னராட்சியில் இருக்கிறது, அதுபோலவே, பெருவாரியான முஸ்லிம்கள் நிறைந்த காஷ்மீரில், இந்து மன்னர் அரசாள்கிறார்.

முஸ்லிம்கள் பெருவாரியாக உள்ள பகுதிகளைப் பாகிஸ்தான் என்று தனி அரசு ஆக்கவேண்டும் என்று கேட்கும் ஜனாப்ஜின்னா, காஷ்மீர், ஒரு இந்து அரசரின் ஆளுகையில் இருப்பதுபற்றிஎதிர்ப்பாக ஏதும்பேசவில்லை; சமஸ்தான விஷயங்களில் தலையிடவில்லை.

இங்கிலையில், மக்கள்மன்னருக்கு எதிரிடையாக நடத்தும் கிளர்ச்சியை, காங்கிரஸ், தலைவர்கள் உட்படப்பலரும், இது சமஸ்தான மக்களின் விடுதலைக்கிளர்ச்சி என்று கூறி, அதனை ஆதரித்து இருந்தும் கூட, இதனை, முஸ்லீம்கள் இந்து அரசனுக்கு எதிரிடையாக நடத்தும் இனப் போராட்டமாகக் கொண்டு சவர்க்கார், மக்களை அடக்கிய மன்னனை, பாகிஸ்தான் முஸ்லிம்களின் புரட்சியை அடக்கியவனே! என்றுபுகழ்ந்து, அடக்குமுறையை ஆதரித்து, மன்னருக்கு வாழ்த்தும் அனுப்பி இருக்கிறார்.

நேர்மையாளர்கள் இந்தப் போக்குச் சரியா, என்று யோசித்துக்கூறவேண்டும்.

ஷேக் அப்துல்லா, பண்டிதநேருவின் நண்பர், காங்கிரசுக்குத் தோழர், முஸ்லிம் லீகினரல்ல. அத்தகைய அப்துல்லா நடத்தும், மக்கள் விடுதலைக் கிளர்ச்சியே, சவர்க்காரின் கண்களுக்கு, இஸ்லாமியர் புரட்சி, அதிலும் பாகிஸ்தான் இஸ்லாமியர் புரட்சி என்ற உருவில் தோன்றுமானல், உள்ளபடியே ஷேக் அப்துல்லா, முஸ்லிம் லீகினராக இருந்திருந்தால், அல்லது முஸ்லிம் லீகினரும் இந்த விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருந்தால், சவர்க்காரின் அறிக்கை இன்னும் எப்படி எப்படி இருந்திருக்குமோ, பாபம்!!

இந்துவின் ஆளுகையாகத்தான் இருக்கட்டும், மக்கள் இஸ்லாமியராகத்தான் இருக்கட்டும், அங்கு நடந்த கிளர்ச்சி, அரசன் இந்து, ஆகவே அந்த ஆட்சியிலே நாங்கள் இருக்கமாட்டோம் என்ற முறையிலே நடத்தப்பட்டிருந்தால், சவர்க்கார் கோபித்துக்கொள்ள நியாயம் இருந்திருக்கலாம். நாட்டு மக்கள், தங்கள்உரிமைக்காகப்போராடினர்; தங்கள் வறுமையைப் போக்கும்படிகேட்டனர். இதனை, ஏன், சவர்க்கார், இந்து—முஸ்லிம் பிரச்னையாக்கவேண்டும்!

ஒரு இந்துஅரசருக்காக, சவர்க்கார், விடுதலை உணர்ச்சி, ஜனநாயகக்கோட்பாடு என்னும் பண்புகளைப்பற்றிய அக்கரையைக்கூட விட்டுவிட்டு, மக்கள் அடக்கப்பட்டது சரி என்று கூறவும், அரசரை ஆதரிக்கவும், வாழ்த்தவும் முன்வந்தார் என்றால், தன் இனத்தவர் பெருவாரியாகஉள்ளராஜ்யத்திலே, நடத்தப்படும் ஆட்சி இந்துவிடம் இருப்பதோடல்லாமல், மக்களின் உரிமையும் பறிக்கப்பட்டு, அடக்குமுறைக்கும் அவர்கள் ஆளாக்கப்பட்டனர் என்பதைக் கேள்விப்படும் ஜனப் ஜின்னா, இஸ்லாமியர் சார்பாக ஏன் பேசமாட்டார்?

'வகுப்புவாதம்' என்கிறார்களே, அது, யார் துவக்குகிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு இது. பெருவாரியான முஸ்லிம்கள்உள்ள நாடு என்று தெரிந்தும், அங்கே இந்து மன்னர் ஆள்கிறார் என்று தெரிந்தும் மக்கள் அடக்கு முறைக்கு ஆளானார்கள் என்று அறிந்தும், நாம் இதிலே தலையிட்டால், இந்து ஆட்சிக்கு எதிரிடையாக முஸ்லிம்களைத் தூண்டிவிடுவதாக நம்மைத் தூற்றக்கூடும், எனவே நாம் இதிலே தலையிடக்கூடாது, என்று ஜனப் ஜின்னா இருக்க, மக்களின் கிளர்ச்சி, இந்து—முஸ்லிம் என்ற முறையிலேநடவாமல், ஆள்வோருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையே நடக்கும் போராட்டம் என்ற முறையிலே நடந்திருக்கும் போது, சவர்க்கார், மக்களை அடக்கிய மன்னரை வாழ்த்தியதும், இஸ்லாமியரின் புரட்சி அடக்கப்பட்டுவிட்டது என்றுகூறிப் பூரிப்பதும், முறையா, நியாயமா, அரசியல் தர்மமா? என்று கேட்கிறோம்.

இத்தகைய மனப்பான்மையே, இந்து—முஸ்லிம் பேதத்தை இந்த அளவுக்கு வளர்த்துவிட்டது.

காஷ்மீரில் வறுமை தாண்டவமாடுகிறது—மக்களிடையே. மன்னரின் பரிவாரங்கள், பரிமள வாழ்வில் உள்ளனர். மன்னருக்குப் பரிவாரங்களாக உள்ளவர்கள், ஜாகீர்தாரர்கள்—இந்துக்கள். படிப்பு, முஸ்லிம்சமுதாயத்திலே நூற்றுக்கு 4-பேருக்கும் கிடையாது. காஷ்மீர் மன்னரின் சட்டப்படி, ராஜபுதனியர்கள் மட்டுமே ஆயுதம் தாங்கலாம். அரசாங்க உத்யோகம் அவ்வளவும், சின்னாட்களுக்கு முன்புவரை, காஷ்மீரப் பார்ப்பனர்களிடமே இருந்தது. கொஞ்சக்காலமாகத்தான் மற்றவர்கள் உத்யோக மண்டலத்திலே புக முடிந்தது. பெரும்பாலான மக்கள் ஏழை விவசாயிகள். பார்ப்பனர்கள் படித்தவர்கள்; பட்டமே அவர்களுக்கு பண்டிட் என்று. காஷ்மீர் பண்டிதர் வகுப்பிலே சேர்ந்தவர்தான் ஜவஹரும். இத்தகைய ராஜ்யத்துக்குத்தான் சவர்க்கார் வாழ்த்துக் கூறினார். அவருடைய வாழ்த்து, கொஞ்சம் தாமதித்துக்கிடைத்தது காஷ்மீரமன்னருக்கு. ஆனல், பிராமணோத்தமர்களின் வாழ்த்து, மன்னருக்கு, முன்பே கிடைத்து விட்டது. பலமானபோராட்டம்நடந்து கொண்டிருந்தபோது, காஷ்மீரமக்கள் விடுதலைக் கிளர்ச்சி நடத்திக்கொண்டிருந்தபோது, ஷேக் அப்துல்லாகைதுசெய்யப்பட்டபோது அடக்குமுறை அமோகமாகக்காஷ்மீரில்நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், மக்கள் பதைபதைத்த சமயத்தில், கூசாமல், சில காஷ்மீரப் பார்ப்பனர்கள், சுவர்களிலே,

"மகாராஜாவாழ்க!" என்றுஎழுதினராம்! அந்தச்சுவரிலே, அவர்கள் மகாராஜாவாழ்க என்று எழுதிக்கொண்டிருந்த போது, காஷ்மீரமண்ணிலே மக்களின் இரத்தம் சிந்திக்கொண்டிருந்தது. அடிபடும் மக்களிடம் அன்பு காட்டவேண்டிய நேரத்தில், அந்தப்பிராமணோத்தமர்கள்,


மகாராஜாவாழ்க! என்று மதிற் சுவரிலே எழுதினர்கள், ராஜத்துவேஷக் குற்றத்துக்காக ஷேக் அப்துல்லா, கைதுசெய்யப்பட்டு, வழக்கு நடக்கும் நேரத்தில், சவர்க்கார்

மகாராஜாவாழ்க! என்று தந்தி கொடுக்கிறார். மகாராஜா வாழ்வார், சந்தேகமில்லை! இவ்வளவு பெரிய பண்டிதசிரோமணிகளும், சவர்க்காரும் வாழ்த்தி இருக்கும்போது, அவர் வாழ்வுக்கு என்னகுறை! மேலும், பிராமணோத்தமர்களின் ஆசீர்வாதபலத்துக்கு அந்தச்சக்தி இல்லாமற்போயினும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பீரங்கிக்கு அந்தச்சக்தி இருக்கத்தானேசெய்யும். அதன் துணையை நாடி, மகாராஜா வாழட்டும், ஆனல் மக்கள் கதி என்னவென்பது பற்றி இந்த மகானுபாவர்கள் கொஞ்சமாவது கவனித்தார்களா? வாழ்த்துகிறார்கள், கூசாமல், கொஞ்சமும், மக்களிடம் அக்கரை கொள்ளாமல், அடக்குமுறையைவீசி, ஆயுதமற்ற மக்களை அடக்கிவிட்ட தீரத்தைப் பாராட்டுகிறார்கள். இந்தப் போக்குச்சரியா? இந்தப் பிராமணோத்தமர்களின்செயல்நியாயமா? இல்லை! என்று கூற உங்களுக்குத் தைரியமில்லையா? எப்படி இருக்கும், பிராமணமமதேவதா! அல்லவோ! மக்கள் செய்தகிளர்ச்சியை அடக்கிய மன்னனை வாழ்த்திய மகானுபாவர்களை நீங்கள் வாழ்த்துங்கள்!!

★

காஷ்மீர் மன்னரை, வாழ்த்தியதோடு நின்றுவிடவில்லை பூசுரக் கூட்டம். ஷேக் அப்துல்லாவின் இயக்கம், மகாராஜாவால் அடக்கப்பட்டதுசரி என்ற கருத்தைப் பிரசாரம் செய்யவும் முன்வந்துவிட்டனர். காஷ்மீர் பண்டிதர்கள் (பிராமணர்) சங்கச்செயலாளர்சிவநாராயண் என்பவர், புதுடில்லியில், காந்தியாரையும் பண்டிதஜவஹரையும் கலந்து பேசிவிட்டுச்சென்றார். இந்தப்பூசுரரின் விஜயத்தின் பலனாகப் பண்டிதஜவஹர் தமது ஆத்

(அடுத்த பக்கம் பார்க்க)

உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

## சட்ட மறுப்பும்—சாஸ்திர மறுப்பும்

2-ம் பக்கத் தொடர்ச்சி

*பார்ப்பனர் தங்கள் தனி உரிமையான சாஸ்திரம் கெடாதபடி சர்வ ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்வர்.*

*தென் ஆப்பிரிக்காவில், வெள்ளையர் (நம்மை) கருப்பரைக்கேவலமாக நடத்துகிறார்கள், வெளிநாட்டான், வேறு இனத்தான் என்று காரணம்காட்டி. இது ஜனநாயகத்துக்கு, தேசிய கௌரவத்துக்கு, மனிதாபிமானத்துக்குக்கேடு தருவதாகும் என்று கூறுகிறோம். உண்மை! ஒரு நாட்டான் மற்றோர் நாட்டவனைக் கேவலமாகக் கருதுவது, மிகக் காட்டுமிராண்டிக் கருத்து; அந்தஆணவத்தைஎதிர்க்கத்தான்வேண்டும். தென் ஆப்பிரிக்காவிலே அதனை எதிர்க்கின்றனர்; நாம் ஆதரிக்கிறோம் அந்தச் சமஉரிமைப் போராட்டத்தை.*

*அங்கு வெள்ளையர், கருப்பரைக் கேவலமாக நடத்துகின்றனர், அமெரிக்கர்கள், நீக்ரோக்களைக் கேவலமாக நடத்துகின்றனர். இந்தக் கொடுமைகள் ஒழிய வேண்டும் என்று கிளர்ச்சி நடக்கும் இக்காலத்திலே, இங்கே,*

*இந்துக்கள், இந்துக்களிலே ஒரு பிரிவினரான பார்ப்பனரல்லாதாருக்குச் சம உரிமை தருவதில்லை*

*இந்துக்களிலேயே ஒரு பகுதியினரான பழங்குடிமக்களைத்தீண்டாதார் என்று கேவலப்படுத்திக் கொடுமை செய்கின்றனர்.*

வெள்ளையர், வெள்ளையரில் சிலபகுதியினரைக் கேவலப்படுத்துவது, தாழ்த்துவது இல்லை.

சீனர் சீனமக்களிலே சிலரைத்தீண்டாதார் என்று சிறுமதியுடன்கூறவில்லை. நீக்ரோ, நீக்ரோவை இழிவுபடுத்துவதில்லை.

ஆனால், இந்து, இந்துவையே இழிவுபடுத்துகிறன், தீண்டாதார் என்கிறன், கோயிலிலே, குளத்திலே, பொதுஇடத்திலே உரிமைதர மறுக்கிறன்.

இந்து, இந்துக்களிலேயே, நாலு ஜாதி என்று பிரித்துக்கொண்டு, ஒருவருக்கொருவர், பேதம்காட்டிவரும் கொடுமையைச் செய்கிறன். இவைகளைச்சாஸ்திரமுறை என்று கூறுகிறன்.

சட்டமறுப்புக்கு வீரர்கள் இருக்கிறர்கள். சாஸ்திர மறுப்புக்கு, யார் முன் வருகிறர்கள்? சட்டமறுப்புச்சாத்யமாகிறது! சாஸ்திர மறுப்பு என்றல் தலைநடுங்குகிறது!

## ஏன்?

★

## வாழ்த்தினர்

5-ம் பக்கத் தொடர்ச்சி

க்கையிலே "அடாணு" வைக் குறைத்துக்கொண்டதுடன், காஷ்மீரில் இயக்கம் அவசரப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது என்று கூறியிருக்கிறர். சிறுபான்மையினர், கிள்ளுக்கீரை, இங்கு! காஷ்மீரில் இந்தப்பண்டிதர்கள் கூட்டம் சிறுபான்மைதான், ஆனல் இவர்களின் செல்வாக்கு, அங்கே அரண்மனையோடுமட்டும் நின்று விடவில்லை, புதுடில்லிவரையிலும் பரவி இருக்கிறது. காஷ்மீரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள விடுதலை இயக்கமே விபரீதமான காரியம் என்று அவர்கள் அறிக்கைமேல் அறிக்கைகள் விடுகிறர்கள், இந்நாட்டுத் "தேசியஏடுகள்" "பயபக்திவிசுவாசத்துடன்" அந்த அறிக்கைகளை, மக்களின் விடுதலைக்கு ஊறுதேடும் அறிக்கைகளை, பிரசுரிக்கத்தவறுவதில்லை.எப்படித்தவறமுடியும்! பிராமணமம தேவதா! அல்லவோ!!

இத்தாலியர், தங்கள்நாட்டுக்கு மன்னன் இருக்கவேண்டுமா வேண்டாமா என்பதுபற்றி, 'ஓட்' எடுத்து, மன்னர் கூடாது என்ற கருத்துக்கே ஆதரவு அதிகம் என்பதைக் காட்டிவிட்டனர், இத்தாலிய மன்னரும், நாட்டைவிட்டுப் போய்விட்டார்.

கிரீசிலே, மன்னர் உள்ளே வரலாமா, கூடாதா என்பது மக்களின் சம்மதத்தைப் பொறுத்து இருக்கிறது. ஐரோப்பா கண்டத்திலே, பல்வேறுநாடுகளிலே, மன்னர் ஆட்சிக்குமரண ஓலை தயாரித்து விட்டனர் மக்கள். இந்த நிலைக்கு நேர்மாருக, இங்கேநடைபெறுகிறது, மன்னர்கள், தங்களின் திவான்கள் மூலம், ஒருபுறம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திடம் பேரம்பேசி, சமஸ்தானங்களின், உள்நாட்டு நடவடிக்கைகளிலே, வெளியார் பிரவேசிக்க முடியாதபடி ஏற்பாடுசெய்து கொண்டதுடன், காங்கிரசிடமும் கொஞ்சிக்குலவி, தங்களின் நிலையைப்பலப்படுத்திக் கொண்டனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், இனி இந்தச்சமஸ்தானங்களைச் செல்லப்பிள்ளைகளாகக்கொண்டு, காலந்தள்ள வழி கண்டுகொண்டனர்.

இத்தகைய சமயத்தில் உண்மையில் மக்கள் விடுதலை கோருபவர்கள், ஏன், இந்தச் சமஸ்தானதிபதிகள் இருக்கத்தான் வேண்டுமா என்பதை அந்தந்தச்சமஸ்தானமக்களின் "ஓட்"டின்படி தீர்மானிக்க வேண்டும் என்று யோசனைகூறலாகாது? ராஜாதி ராஜாக்களைக் கோபமூட்டக் கூடாது என்று எண்ணுவதானல், அவர்கள்வேண்டுமானல் இருந்து தொலைக்கட்டும், மக்கள் மன்றத்திடம்முக்கியமான பொறுப்புகளை விட்டுவிட வேண்டும், என்ற கிளர்ச்சிகளை ஏன் ஆதரிக்கக்கூடாது. விடுதலை உணர்ச்சியுள்ளவர்கள் இதனைச் செய்வர். ஆனல் காஷ்மீர் நாட்டு விப்பிரரும், இந்திய உபகண்டத்திலே இந்து மகாசபை நடத்தும் விப்பிரரும், மக்களின் விடுதலைக்காகப் போரிட்ட இயக்கத்தை நசுக்கிய "மாபெரும்" காரியத்துக்காக, காஷ்மீர மன்னரை வாழ்த்துகிறர்கள்! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் அதற்கு!!

காஷ்மீருக்கு வரப்போவதாகப் பண்டித ஜவஹர், மகாராஜாவுக்குத் தந்தி கொடுத்தார், அனுமதிகோரி. மகாராஜா, "இந்தச் சந்தர்ப்பத்தில் பண்டிதநேரு காஷ்மீர் வருவதில் பலன் இல்லை; பயணத்தை நிறுத்திக்கொள்ளவும்" என்று பதில் அனுப்பிவிட்டார். மரியாதையான பாஷை; அர்த்தம் "காஷ்மீருக்குள் காலடி எடுத்து வைக்காதே!" என்பதுதான். மன்னரின் பதில் மட்டுமல்ல, பல ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும், பண்டித ஜவஹரை இப்போது காஷ்மீர் வரவேண்டாம் என்று தந்தி மூலம் கேட்டுக்கொண்டுள்ளனர். யார் அவர்கள்? யாராகஇருக்கமுடியும்! மகாராஜரை வாழ்த்திய பூசுரக் கூட்டமாகத்தான் இருக்கமுடியும்.

## மைசூர் சர்க்காருக்கு.

தென் ஆப்பிரிக்காவிலே, இந்தியாவிலிருந்து சென்றவர்களைச் சேரிப்புறத்தில்ஒதுக்கும் அளவுக்கு நிறபேதம் காட்டி இருப்பதுடன், சட்டமூலம் இந்தக் கொடுமையை அமுல் நடத்துகிறர்கள். இந்தப் "பேதபுத்தி" வேண்டாம் என்ற வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு விட்டது. இந்திய சர்க்காரின் வேண்டுகோளை, ஆப்பிரிக்க சர்க்கார் ஏற்கவில்லை. எனவே தென் ஆப்பிரிக்க சர்க்காருடன், வியாபாரத்தொடர்பு அறுக்கப்பட்டுவிட்டது என்று இந்திய சர்க்கார்தெரிவித்துவிட்டதுடன், ஹைகமிஷனரையும் திருப்பி அழைத்துக்கொண்டனர்.

தென் ஆப்பிரிக்கச் சட்டத்தை மீறி, இந்தியர்கள் கிளர்ச்சிதுவக்கி விட்டனர்.

மைசூர் சர்க்கார், படைகளின் பிரதம தளபதியாக, லெப். கர்னல் பிரெஸ்டன் என்ற தென் ஆப்பிரிக்கர் இருப்பதாகத் தெரிகிறது.

தென் ஆப்பிரிக்காவில் இந்திய பூபாகத்தினருக்கு இழைக்கப்படும் கொடுமையைக் கண்டிப்பதில், இந்திய சர்க்காரும் இந்தியாவிலுள்ள பல்வேறு பிரிவினரான மக்களும் ஒன்றுபட்டிருப்பதுடன், எல்லா அரசியல் கட்சிகளும் ஒருமுகமாக இதனைக்கண்டித்துள்ளன. இவ்வளவுக்குப் பிறகும் தென் ஆப்பிரிக்கசர்க்கார், வழிக்கு வரவில்லை.

இந்த நிலையில், மைசூர் சமஸ்தானம், ஒரு தென் ஆப்பிரிக்கரைப் படைத்தளபதியாக ஏன் வைத்திருக்கவேண்டும்? இந்திய பூபாகத்தினரை அவமதிக்கத்துணியும் நாட்டவருக்கு, இங்கேஒருசமஸ்தானப் படைத்தலைவர் பதவி தருவது, எந்த விதத்திலே சரியானகாரியமாகும்? ஏன், மைசூர் சர்க்கார், தென் ஆப்பிரிக்க சட்டத்தைக் கண்டிக்கும் அறிகுறியாக, தென் ஆப்பிரிக்கத் தளபதி எமக்கு வேண்டாம்என்று கூறக்கூடாது?

மைசூர் சர்க்கார் தைரியமாக இந்தக்காரியத்தைச் செய்தால், தென் ஆப்பிரிக்க சர்க்கார் தமது போக்குக்குச்சரியான "சூடு" தரப்பட்டது என்பதை உணருவர். வெளிநாடுகளும், இப்படி ஒரு நிகழ்ச்சி நேரிடுமானல், உண்மையிலேயே, இந்திய பூபாகத்திலே புதுஎழுச்சி, சுயமரியாதை, தோன்றிவிட்டது என்பதைஉணர்வர், தென் ஆப்பிரிக்க சர்க்காருக்கும் சரியான பாடம் கற்றுக் கொடுத்ததாகும். மைசூர்சர்க்கார் இதனைச்செய்ய முன்வருமா?

சுதேச சமஸ்தானங்களின்சபையும், தென் ஆப்பிரிக்க சர்க்காரின் போக்கிலே, தமக்கு இருக்கும் கசப்பை எடுத்துக்கூறி, இதற்காக இந்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளிலே சமஸ்தான சர்க்கார்களும் ஒத்துழைக்கத்தயாராக இருப்பதாகச் சுற்றறிக்கை விட்டிருக்கிறது. இந்நிலையில், மைசூர் சர்க்கார், ஏன் ஒரு தென் ஆப்பிரிக்கரைப் படைத்தலைமைத்தளபதியாக வைத்திருக்க வேண்டும்? இந்திய சர்க்கார், இந்திய ரிசர்வ் பாங்கியிலே, தென் ஆப்பிரிக்கர் "ஷேர்" (பங்கு)பெறுவதுகூடக்கூடாது என்ற தடுத்துவிட்டது இவ்வளவுதூரம், இந்திய சர்க்கார்வெளிப்படையாகத்தென் ஆப்பிரிக்க சர்க்காரைக்கண்டித்து நடவடிக்கைகள் எடுத்தான பிறகும், மைசூரில் ஒரு தென் ஆப்பிரிக்கருக்குப், பெரிய, பொறுப்பான, முக்யத்வம் வாய்ந்த பதவி இருப்பது, கூடாது என்பதை மைசூர் சர்க்கார்உணரவேண்டும்; உடனே ஆவனசெய்து, தென் ஆப்பிரிக்க சர்க்காருக்குப் புத்திபுகட்டவேண்டும்.

மைசூர் சர்க்கார் துணிந்து இந்தக்காரியத்தைச் செய்யுமா?

---

## சிந்தனைக்கு!

சென்னை மாகாணத்திலே மீண்டும் மந்திரிசபை அமைத்து நடத்தவோ, காங்கிரஸ் கட்சியின் தலைமையில் இருக்கவோகூடாதுஎன்று பெருவாரியான காங்கிரசாரால், வெறுத்து, ஒதுக்கித் தள்ளப்பட்டவர், அன்பர் ஆச்சாரியார்.

ஒரு மாகாணத்தின் நிர்வாகத்தையே, தன் (சொந்த) கட்சியின் தலைமையையே, மக்கள் தரமறுத்தனர், மகாத்மாமுறையிட்டும்பலன் இல்லை, ஆச்சாரியார் வேண்டாம் என்று சென்னை மாகாணம் கூறி விட்டது.

ஆனல், மேன்மைதங்கிய வைசிராயின் அழைப்பு கிடைத்திருக்கிறது, ஆச்சாரியாருக்கு!

மாகாண நிர்வாகத்தை அவரிடம் ஒப்படைக்க மக்கள் மறுத்தனர், "மன்னர்பிரானின் சர்க்கார்" இந்திய உபகண்ட நிர்வாகத்துக்குப் பொறுப்பான சபையிலே ஆச்சாரியாருக்கு இடமளிக்கிறது! ஏன்?

வைசிராயின் கருத்துச் சென்ற விதம் அது.

சரி! ஆச்சாரியாரை, வேண்டாம் என்ருர்களே, காங்கிரஸ்காரர்கள், அதற்கான காரணங்களைக் கூறும்போது சொன்னர்களே ஆச்சாரியாரின் "குணதிசயங்கள்," அவை மாறிவிட்டனவா? இல்லை! அந்த நிலையில், சென்னை மாகாணத்தின் சார்பிலே, வைசிராய் நிர்வாக சபைக்கு ஆச்சாரியார் அழைக்கப்படுவதை, எப்படிச்சரி என்று, ஆச்சாரியார் எதிர்ப்புக்கோஷ்டியினர் கூறமுடியும்?

தங்கள் அதிருப்தியை, வைசிராய்க்கோ, காங்கிரஸ் தலைவர், ரட்சகர் ஆகியவர்களுக்கோ தெரிவிப்பார்களா!

அப்படித்தெரிவித்தால் ஏதாவது அதனல் பலன் இருக்குமா?

தாங்கள் "கூடாது" என்றுகூறி ஒதுக்கிவிட்டவருக்குத்தங்கள் "தலைக்குமேலே" ஸ்தானம் கிடைப்பதைக்கண்டு, "என்ன செய்வது! அது அவாளவாள் அதிர்ஷ்டம்!" என்று கூறிவிட்டுத்தான் சும்மா இருந்துவிடுவார்களோ!!

---


## காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு

O. S. No. 146 of 1946.

சுந்தர விநாயகர் டாலசுப்பிரமண்ய ஸ்வாமி கோவில், ஏகாம்பரபுரம், டிரஸ்டி. கோவிந்தராஜு முதலியார் வகையரு, வாதி.

அப்பாதுரை முதலியார் வகையரு பிரதிவாதிகள்:

ஏகாம்பரபுரம் தெருவிலிருக்கும்வெள்ளாடி முதலியார்கள் யாவர்களுக்கும் பிரதிநிதியாக வாதிகள் தாவாசெய்திருப்பதில் ஆக்ஷேபனை உள்ளவர்கள் ஷை கேஸ் 24—6—46ந்தேதியில் ஆஜராய் ஆக்ஷேபனை சொல்லிக்கொள்ள வேண்டியது.

N. சீனிவாசாச்சாரியார்,
வாதி வக்கீல்.

6—6—46. காஞ்சிபுரம்


Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.